Registered as a News paper | பக்கங்கள் 10 | விலை 07/=

# ஈழநாதம்


மட்டக்களப்பு பதிப்பு | மக்கள் நாளிதழ்

Eezhanatham

மின்னியல், இலத்திரனியல்
உபகரணங்கள் பெறுவதற்கு OR
பழுதுபார்க்க, பாடல்கள், படங்கள், ஒலி, ஒளி
நாடா, இசை தட்டுக்கள் பெறுவதற்கு நாட
வேண்டிய இடம்
T.V.R. ELECTRONIC'S
NO 88/1
DOCTOR LANE
KALUWANCHIKUDI.
காட்சியறை
T.V.R SONY SHOW ROOM
பிரதான வீதி,
(மக்கள் வங்கி அருகாமை)
களுவாஞ்சிகுடி

நாதம் 01 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | தை 02 | 15.01.2005 சனிக்கிழமை | ஓசை 221





## பெரிய புல்லுமலை, உன்னிச்சையிலிருந்து தனியார் பேருந்து சேவை ஆரம்பம்

### கட்டளைத் தளபதி கேணல் பானு ஆரம்பித்து வைத்தார்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நீண்ட காலமாக நிலவி வந்த போக்குவரத்துப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் தைப்பொங்கல் தினமான நேற்று தனியார் பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் வேண்டுகோளுக்கிணங்க மேற்படி தனியார் பேருந்து சேவை பெரிய புல்லுமலையிலிருந்து மட்டக்களப்புக்கும் உன்னிச்சையிலிருந்து மகிழவட்டவான் வவுணதீவு ஊடாக மட்டக்களப்புக்கும் இச்சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மட்டு அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு நேற்று வைபவ ரீதியாக இச்சேவையினை ஆரம்பித்து வைத்தார். தனியார் பேருந்து நிலையப் பொறுப்பதிகாரி ஞானேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விரைவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போக்குவரத்து குறைபாடுகள் நிலவும் பகுதிகளுக்கும் இச்சேவை விஸ்தரிக்கப்படவுள்ளது.

## கோமாரி அகதிகளின் அவலம் சொல்லிமாளாது;

### கூடார கூரை ஒழுகுகிறது;தரை கசிகிறது

### விஜயம் செய்த சிவாஜிலிங்கம் எம்.பி

(விரி சகாதேவராஜா)

திருக்கோவிலை அடுத்துள்ள கோமாரிப்பிரதேசம் இரு துண்டுகளாக தனிமைப்படுத்தப்பட்டு நிவாரண நடவடிக்கைகளில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

கோமாரிப்பாலம் கடலில் அடித்துச் செல்லப்பட்டதனால் பொத்துவில் பிரதேசத்தில் 350 குடும்பமும், திருக்கோவில் பிரதேசத்தில் 400 குடும்பமும் தற்காலிக கூடாரங்களில் இருப்பதாக யாழ்.மாவட்ட எம்.பி கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஐந்து நாட்களாக தங்கியிருந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் கூறி வருகிறார்.

கோமாரிக்கு விஜயம் செய்து பார்த்தபோது கூடாரங்கள் ஒழுகுவதாகவும், தரையில் நீர் கசிவதையும் அவதானிக்க முடிந்ததாகக் கூறும் சிவாஜிலிங்கம் எம்.பி இதுவரை அங்கு பிரதேச செயலாளர் சென்று பார்வையிடவில்லையென மக்கள் கூறி

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# கனடாவின் நிதி உதவிகள் தமிழர் தாயகத்துக்கு சமனாக பகிரப்படும்

## அரசு கைக்கு போகாது என்கிறார் ஜிம் கரியானிஸ்

(நமது நிருபர்)

**அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக தமிழர் தாயகப் பகுதிக்கான கனடாவின் நிதியுதவிகள் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும் இதில் பாரபட்சம் காட்டப்படமாட்டாது. என கனேடிய நாடாளுமன்ற உறுப்பினரை ஜிம் கரியானிஸ் தெரிவித்துள்ளார்.**

தொண்டர் நிறுவனங்கள் ஊடாக வழங்கப்படும் இந்த உதவிகளை சிறிலங்காவின், வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கும் சமமாகப் பகிர்ந்தளிப்பதற்கு தாம் உறுதியளித்திருப்பதாக அவர் கூறினார். நேற்று காலை முகமாலை வழியாக வன்னிக்கு பயணம் செய்த அவர், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பிரதேசத்தை நேரில் சென்று பார்வையிட்டார். கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நண்பகல் 12 மணியளவில் அரசியற்துறைப் பொறுப்பாளர்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## கல்லடியில் கடல் அலை பீதி!

### மக்கள் விடிய விடிய விழிப்பு

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடி,டச்பார், முகத்துவாரம், வேலூர் ஆகிய பிரதேச மக்கள் கடல் அலை மீண்டும் வருகின்றது என்ற வதந்தி பரவியதை அடுத்து வியாழன் நள்ளிரவு 10.30 மணி தொடக்கம் 11.30 மணிவரை அப்பிரதேச மக்கள் அல்லோல கல்லோலப்பட்டு

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## தாயகத்தில் தைப்பொங்கல் களை கட்டவில்லை

(நமது நிருபர்)

உழவர் தினமாகிய தைப் பொங்கல் திருநாளை உலகம் வாழ் தமிழர்கள் நேற்று கொண்டினார்கள்.

இருப்பினும் தமிழீழத் தமிழர்களின் தாயகப் பிரதேசங்களில் ஏற்பட்ட ஆழிப்பேரலை இழப்புக்களால் அப்பிரதேசங்களில் தைப்பொங்கல் களை கட்டவில்லை என தெரிய வருகின்றது.

ஆழிப்பேரலையால் தமிழர் தாயகப் பிரதேசங்களில் ஏற்பட்ட இழப்புகள், அழிவுகள் தொடர்பான அதிர்ச்சியிலும் சோகத்திலும் இருந்து எம் மக்கள் இன்னும் இது வரை மீளவில்லை. இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட எம் உறவுகள் அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் ஏதுமற்றவர்களாக இருக்கின்றனர்.

வாழ்க்கையின் அடுத்து கட்டம் என்ன என்று தெரியாத நிலையில் அவர்கள் இருக்கின்றனர். இப்படியான சூழ்நிலையில் தைப்பொங்கல் திருநாளை தமிழர் தாயக மக்கள் நேற்று கொண்டாடினார்கள்.

எமது செய்தியாளர்களின் தகவல்களின் படி கடந்த காலங்களைப் போல் கலகலப்பான தைப் பொங்கல் இல்லை.

இருப்பினும் அகதிமுகாம்களில் வாழ்ந்தாலும் எம் மக்கள் சூரியனுக்கு செய்ய வேண்டிய நன்றிக் கடனை செய்துள்ளனர். வவுனியா

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தோர் நினைவாக பிரார்த்தனை நிகழ்வு

(எம்.யுவராஜ்)

சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்த அனைவருக்கும் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்தனை நிகழ்வொன்று நேற்று காலை 10.00 மணியளவில் கொக்கட்டிச்சோலை கதிரொளி சிறுவர் இல்லத்தில் நடைபெற்றது.

கதிரொளி இல்லத்தின் ஸ்தாபகர் எஸ்.துரையப்பா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கதிரொளி இல்லத்திலிருந்து விடுமுறைக்காக சென்றிருந்த வேளை

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## கலாசார அமைச்சர் மட்டு நகருக்கு வருகை

(நமது நிருபர்)

மட்டக்களப்புக்கு நேற்று கலாசார அமைச்சர் விஜய ஹேரத் வருகை தந்தார். இவர் அரச அதிபர் வே. சண்முகம் அவர்களை சந்தித்து

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## மட்டு அம்பாறை அகதி முகாம்களில் நுளம்புத் தொல்லை அதிகரிப்பு

(பாண்டிருப்பு நிருபர்)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலுள்ள அகதி முகாம்களில் நுளம்புகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக சுகாதார வைத்திய திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் மலேரியா, டெங்கு மற்றும் நுளம்புகளால் ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதாகவும் சுகாதார வைத்திய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதற்கான முதற்கட்ட வேலைகளை கல்முனைப் பிர

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## ஈழவேந்தன் எம்.பி அம்பாறைக்கு விஜயம்

(சர்வேஸ்வரன்)

தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான மா.க. ஈழவேந்தன் நேற்று அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

ஆழிப் பேரலை அனர்த்தம் காரணமாக பாதிப்புற்ற திருக்கோ

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# செய்தித் துளிகள்

## 280க்கு மேற்பட்ட பாடசாலைகள் சேதம்

(இ.மகேசன்)

நாட்டில் ஏற்பட்ட சுனாமி கடலலையின் தாக்கம் காரணமாக 280றக்கும் மேற்பட்ட பாடசாலைக்கான கட்டிடங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இவற்றில் 170 பாடசாலைகள் முற்றாகச் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் ஏனையவை பகுதியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

2005ம் ஆண்டின் முதலாம் தவணைக் கல்வி நடவடிக்கைகளுக்காக கடந்த 03ம் திகதி திறக்கப்படவிருந்த பாடசாலைகள் இம் மாதம் 10ம் திகதி மீண்டும் திறக்கப்படுகின்றன. இருப்பினும் சுனாமி அலைத் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள பாடசாலைகள் எதிர்வரும் 20ம் திகதி ஆரம்பிக்கப்பட்டக் கூடியதாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## சுனாமி சேத விபரங்கள் திரட்டப்படுகின்றன

(இ.மகேசன்)

சுனாமி கடலலைத் தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்டு மரணமான மற்றும் காயமடைந்த் ஆசிரியர்களின் விபரங்களும் ஆசிரியர்களுக்கான சொத்து இழப்புக்கள் பற்றிய விபரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

கல்குடா கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்க ளின் பாதிப்புக்கள் பற்றிய விபரங்களைத் திரட்ட வென தயாரிக்கப்பட்ட படிவங்கள் அதி பர்களூடாக அனுப்பப்பட்டுள்ளன. இப்படிவத் திலே சுனாமி அனர்த்த மூலம் ஆசிரியர்க்கு ஏற்பட்ட உயிர்ச்சேதம், உடமைச் சேதம் மற்றும் ஏனைய பாதிப்புகள் தொடர்பான விடயங்கள் சேகரிக்கும் விதமாக பாதிப்படைந்த அனைத்து ஆசிரியர்களும் அதிபரிடம் படிவத்தைப் பெற்று நிரப்பிக் கொடுப்பதன் மூலம் எதிர்கால நஷ்டஈடு, மற்றும் சலுகைகளைப் பெறுவதற்கு உதவுமாகையால் சகல பாதிக்கப்பட்ட ஆசிரியர்களும் தமது இழப்புக்கள் பற்றிய விபரங்களை அதிபரூடாகச் சமர்ப்பிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## செஞ்சிலுவைச் சங்க சுனாமி பணிக்கு பாராட்டு

(நமது நிருபர்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வெளிநாடுகளிலுள்ள செஞ்சிலுவைச் சங்கங்களும் மட்டக்களப்பு மாவட்ட செஞ்சிலுவைச் சங்கங்களுடன் இணைந்து சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கான பணிகளை மிகவும் வெற்றிகரமாகச் செயற்படுத்தி வருகின்றனர்.

இச்சேவை குறித்து இலங்கை செஞ்சிலுவைச் சங்கக்கிளைச் செயலாளர் பி.எஸ்.ஜெயசிங்கம் நன்றி தெரிவித்தார்.

## மனித முகத்துடன் ஆட்டுக்குட்டி

(நமது நிருபர்)

புத்தளம் நுரைச்சோலையில் அதிசய ஆட்டுக்குட்டியொன்று பிறந்துள்ளது. மனித முகத்தையொத்த இந்த ஆட்டுக்குட்டிக்கு இரண்டு கால்களும் மேலும் சிறியகைகளைக் கொண்டதாக மற்றைய கால்களும் காணப்படுகின்றன.

சுமார் 6.5 இடையுள்ள இந்த ஆட்டுக்குட்டியைப் பார்ப்பதற்கு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வந்த வண்ணம் இருப்பதாக ஆட்டுக்குட்டியின் உரிமையாளர் எம். அப்துல் தெரிவித்துள்ளார்.

## மருத்துவ முகாம்

(நமது நிருபர்)

சுனாமிப் பேரலைத் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு மட்.சந்திவெளி சித்திவிநாயர் வித்தியாலயத்தில் தங்கியுள்ள 350 பேருக்கானமருத்துவ சிகிச்சை திங்களன்று நடைபெற்றது.

ஆறு பேர்களைக் கொண்ட பிரான்ஸ் நாட்டு வைத்தியர் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட இவ்வைத்திய முகாமில் நலன்புரி நிலையத்தில் தங்கியிருப்பவர்கள் பயனடைந்தனர்.

# சுனாமிக்கு பின் ஏற்பட்ட சுமூக நிலையை சிறிலங்கா அரசு வீணடித்து வருகிறது

## -அமெரிக்க லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ் விபரிப்பு-

(நமது நிருபர்)

**ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் கொபி அனான் தமிழர் பிரதேசங்களுக்கு பயணம் செய்து விடுதலைப் புலிகளுடனான சந்திப்புக்களை மேற்கொண்டிருப்பின் அந்தப் பயணம் தனியானதொரு தமிழ் அரசு இருப்பதனை மறைமுகமாக ஏற்றுக் கொண்ட தாகவே இருந்திருக்கும் என சிறிலங்கா அரசு அச்சம் கொண்டதே உண்மை என லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ், எனும் அமெரிக்கப் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.**

சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான தற்போதைய நிலைகுறித்து மேலும் அந்தப் பத்திரிகை விபரிக்கையில், சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த விரிசல் நிலை ஆழிப்பேரலையின் தாக்கத்திற்குப் பின்னர் ஒரு சுமூகநிலையினை அடையக் கூடியதாக இருந்த அரிய சந்தர்ப்பத்தினை சிறிலங்கா அரசு வீணடித்துவருவது போலவே தெரிகின்றது. நீண்டகாலமாக உள்நாட்டு யுத்தமொன்றில் ஈடுபட்டது மட்டுமன்றி 60,000க்கும் மேலான மக்களும் கொல்லப்பட்டிருந்தனர். இப் போரினால் இறந்தவர்கள் எண்ணிக்கையோகிட்டத்தட்ட ஆழிப்பேரலையினால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையின் இரண்டு மடங்காகும். இவ்வாறான தொரு பேரழிவிற்குப் பின்னரும் கூட, மனிதாபிமான நடவடிக்கைகளை பின்தள்ளி விட்டு மீண்டும் ஒரு யுத்த களத்தை நோக்கியே காய்கள் நகர்த்தப்பட்டு வரும் அபாயகரமான சூழ்நிலை தோன்றியுள்ளது. சிறிலங்கா அரசு தமிழ் மக்களுடனான நட்புறவை பேணக் கிடைத்திருக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தினை கை நழுவவிடக் கூடாது. குறிப்பாக, இலங்கை தீவை ஆழிப்பேரலை தாக்க முன்னரே கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக சிறிலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் கடைப்பிடித்து வரும் யுத்த நிறுத்தம் முடிவிற்கு வரும் ஒரு அபாயகரமான சூழ்நிலை இருந்தது.

ஆழிப்பேரலையின் கொடூரத்தின் பின்னர், தமிழர் பிரதேசங்களுக்கான நிவாரணப் பொருட்கள் விநியோகத்தில் பல பாரபட்சங்கள் இருந்து வருவதாக தமிழ் மக்கள் தங்கள் ஆட்சேபணைகளை தெரிவித்து வந்தனர். சிறிலங்கா அரசோ அவர்களது ஆட்சேபணைகளை நிராகரித்த அதே வேளை, ஐக்கிய நாடுகள் சபையின் செயலா ளர் நாயகம் கொபி அனானை தமிழர் பிரதேசங்களைப் பார்வையிட விடாது பாதுகாப்பு சிக்கல்களை காரணம் காட்டி அனுமதியளிக்க மறுத்தது. அவ்வாறு கொபி அனான் தமிழர் பிரதேசங்களுக்கு பயணம் செய்து விடுதலைப் புலிகளுடனான சந்திப்புக்களை மேற்கொண்டிருப்பின், அந்தப் பயணம் தனியானதொரு தமிழ் அரசு இருப்பதனை மறைமுகமாக உறுதிப்படுத்துவதாக இருந்திருக்கும் என சிறிலங்கா அரசு அச்சம் கொண்டதே உண்மை எனவும் அப்பத்திரிகை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# கனடா பிரதமர் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கு செல்வது குறித்து கருத்துக் கணிப்பு

(நமது நிருபர்)

கனடாவின் பல்லினத் தொலைக்காட்சியான ஓம்னி தொலைக்காட்சி நிறுவனம் நடாத்தும் கருத்துக்கணிப்பில், கனடியப் பிரதமர் போல் மார்ட்டீன், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று கருதுகிறீர்களா என்று பொதுமக்களிடம் கருத்துக் கேட்கப்பட்டுள்ளது. கனடியப் பிரதமர் போல் மார்ட்டீன் அவர்கள், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விஜயம் மேற்கொள்ள மாட்டார் என்று சிறிலங்கா அரசு அறிவித்துள்ள நிலையில், தாயக மக்கள் தங்கள் விருப்பை இக்கணிப்பீட்டின் மூலம் மட்டுமல்லாது, தங்களது பகுதி பாராளுமன்ற உறுப்பினர்களூடாகவும், நேரடியாக தொலை நகல் அல்லது ஈமெயில் மூல மாகவும் பிரதமரது காரியாலயத்திற்குத் தெரியப்படுத்துவது அவசியமானது என்று தெரிவிக்கப்படுகிறது.

# காத்தான்குடிக்கு மிதமிஞ்சிய நிவாரணம் ஹிஸ்புல்லா மீது இராணுவம் புகார்

(நமது நிருபர்)

காத்தான்குடி போன்ற பிரதேசங்களில் பாதிப்புக்கள் குறைந்த பகுதிகளாக இருந்த போதிலும், கட்டுநாயக்கா விமான இறங்குதுறை மற்றும் விமான சேவைக்குப் பொறுப்பாகவுள்ள எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் உத்தரவுப்படி, அளவுக்கதிகமான நிவாரணப் பொருட்கள் அங்கு தொடர்ச்சியாக அனுப்பப்பட்டுள்ளதாக சிறிலங்கா இராணுவம் குற்றஞ்சாட்டியுள்ளது என இணையத்தளச் செய்தியொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்காக உடனடியாக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய 250 கூடாரங்கள் நேரடியாக காத்தான்குடிக்கு ஹெலிக்கொப்டர் மூலம் அனுப்பப்பட்டதாகவும் மற்றும் உணவுப் பொருட்கள், உடை, ஏனைய அவசர நிவாரணப் பொருட்கள் என்று ஏராளமான பொதிகள் காத்தான்குடி பகுதிக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டமையும் இராணுவ தரப்பால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகவே பாதிப்படைந்த பகுதியாகக் கருதப்படும் காத்தான்குடிக்கு சிறிலங்காவின் ஏனைய அனைத்துப் பகுதிகளையும்விட மிக அதிகமான நிவாரணப் பொருட்கள் நேரடியாக விமான நிலையத்திலிருந்தே ஆகாய மூலமாக அனுப்பப்பட்டமை எதற்காக என்று இராணுவத் தரப்பிலிருந்து கேள்வியெழுந்துள்ளது. இதுதவிர, கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு வந்திறங்கிய பல அவசர நிவாரணப் பொருட்களுடனான பொதிகள் வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்படுவதாகப் பதிவானாலும், மிக அதிகமான பொதிகள் முற்றிலும் முஸ்லிம் பகுதிகளிலேயே ஆகாய மூலமாக முதலில் விநியோகிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக சிறிலங்கா இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது. குறிப்பாக எந்தப் பாதிப்பையும் எதிர்கொள்ளாத கிராமங்களிலுள்ள மக்கள் எவ்வாறு நிவாரணப் பொருட்களுடனான பொதி களைப் பெற முடிந்தது என்றும் மிக மோசமாகத்தாக் கப்பட்ட கடற்கரையோரக் கிராமங்களில் மக் கள் உணவோ உடையோ இன்றி அவதிப்பட்டுக்கொண்டிருந்த அதே நேரத்தில், எதுவித பாதிப்புமற்ற கிராமங்களில் மக்கள் நிவாரணப் பொதிகளைப் பெற்றுள்ளமை குறித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சிறிலங்கா இராணுவத் தரப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

# உலக தரிசனம் மீதான குற்றச்சாட்டுக்கு பணிப்பாளர் சூவாலி பதில்

(நமது நிருபர்)

ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்காக துடுப்பாட்ட நிதி சேகரிப்பு தொடர்பில் தமது அமைப்பின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை உலக தரிசனம் அமைப்பு (World Vision) மறுத்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை அவுஸ்ரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடத்தப்பட்ட நிதி சேர்க்கும் போட்டியிலிருந்து பெற்ற தொகையை அந்த அமைப்பிடம் ஒப்படைத்ததற்கு ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய கடும் விமர்சனங்களையும் கண்டனங்களையும் தெரிவித்திருந்தன. இது தொடர்பாக உலக தரிசனத்தின் இலங்கைத் தீவகத்துக்கான பணிப்பாளர் சூவாலி வெளியிட்டுள்ள கருத்து:

எமது அமைப்பின் மீது சிறிலங்கா அரசாங்கமோ அல்லது பிரதான எதிர்கட்சியோ குற்றச்சாட்டுக்களை சுமத்தவில்லை. சில அரசியல் கட்சிகளே இந்த குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளன. உலக தரிசனம் என்ற அமைப்பு உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரச சார்பற்ற அமைப்பாகும். அத்துடன் மிகவும் உயர்ந்த கணக்காய்வு தன்மை வாய்ந்த அமைப்பாகும். எனவே இந்த அமைப்பின் மீது குற் றம் சுமத்துவது எந்தளவு சாத்தியம் என்பது தெரியவில்லை. அண்மையில் அவுஸ்ரேலியாவில் இடம்பெற்ற நிதிசேகரிப்பின் போது அதற்கு நிதியுதவி அளித்தவர்கள் அவுஸ்ரேலியாவின் சாதாரண பிரஜைகளாவர்.

எனவே அவர்களுக்கு உலக தரிசனமான தமது அமைப்பு கணக்குக் கூற வேண்டியது அவசியமாகும். இந்த நிலையில் எமது அமைப்பு சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணக்காய்வு நிறுவனமான Pricewaterhouse Coopers (PWC) போன்ற அமைப்பின் கணக்காய்வுக்கு உட்பட்ட ரீதியில் செயற்பட வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது. அத்துடன் சிறிலங்கா மக்களுக்கும் எமது அமைப்பு உரிய கணக்குகளை சமர்ப்பிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சேத விபரங்களை மதிப்பீடு செய்யாது கட்டட இடிபாடுகளை அகற்ற மக்கள் எதிர்ப்பு

(நமது நிருபர்)

கல்முனைப் பிரதேசத்தில் பொது மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் தொடர்பான சேதங்கள் மதிப்பீடு செய்யப்படாமல் கட்டிட இடிபாடுகள் அகற்றப்படுவதற்கு சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள்.

கல்முனைப் பிரதேசத்தில் இக்கட்டட இடிபாடுகளை அகற்றச் சென்ற மாநகர சபை ஊழியர்கள் பாதிக்கப்பட்ட மக்கள் காட்டிய எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக தமது நடவடிக்கையை கைவிட்டு திரும்பியுள்ளார்கள். 8 கனரக வாகனங்கள் மற்றும் 8 உழவு இயந்திரங்கள் சகிதம் மாநகர சபை ஊழியர்கள் கட்டிட இடிபாடுகளை அகற்றச் சென்ற சமயம் அதனைத்தடுத்த பொது மக்கள் வாகனங்களின் குறுக்கே அமர்ந்து அதனை செல்ல விடாமல் தடுத்தனர்.

மேற்குறிப்பிட்ட கோரிக்கையுடன் தாங்கள் எதிர்காலத்தில் எங்கே புதிதாக குடியமர்த்தப்பட இருக்கின்றோம் என்ற உத்தரவாதத்தை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும் என்றும் மற்றுமொரு கோரிக்கையையும் முன் வைத்துள்ளனர்.

இருப்பினும் மாநகர சபை ஆணையாளர் எம்.சலீம், அம்பாறை அரசாங்க அதிபர் ஹேரத் அபயரத்ன வுடன் தொடர்பு கொண்ட பின்னர் அளித்த உறுதி மொழியையடுத்து எதிர்ப்பு நடவடிக்கைகள் கைவிடப்படுள்ள தோடு வாகனங்களும் விடிவிக்கப்பட்டுள்ளது.

## முழுமையாகச் சேதமடைந்த பாடசாலைகள் எதிர்வரும் 24ஆம் திகதி மீண்டும் ஆரம்பம்

(இ.மகேசன்)

சுனாமி அனர்த்தம் காரணமாக முழுமையாக அழிவடைந்துள்ள பாடசாலைகள் மீண்டும் 24ம் திகதி முதல் செயற்படக்கூடியவாறு புனரமைக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் 59 பாடசாலைகள் இவ்வாறு முழுமையாகச் சேதமடைந்துள்ளன. இவ்வற்றை விரைவாகக் கட்டியெழுப்ப விசேட செயற் திட்டம் அமுலாக்கப்படவுள்ளதாக தேசிய அவசரகால நிலையத்தின் கல்விப் பொறுப்பாளர் எஸ்.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும் போது பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புக்கள் தற்காலிகமாக நடை பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

## உயர்தரப் பரீட்சையை மூன்று மாதங்களுக்குப் பிற்போடவும்

**கல்முனை ஹொலிபீல்ட் நிறுவனம் கடிதம்**

(கல்முனை நிருபர்)

2005 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையினை மூன்று மாதங்களுக்குப் பிற்போட நடவடிக்கை எடுக்குமாறு கோரி வீடமைப்பு நிர்மானத்துறை கிழக்குக் கல்வி மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் பேரியல் அஸ்ர.்.ப்புக்கு கல்முனை ஹொலீபீல்ட் நிறுவனம் கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

ஹொலீ பீல்ட் நிறுவனத்தின் செயலாளர் எஸ்.எல்.றியாஸ் கையொப்பமிட்டு அனுப்பியுள்ள குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற சுனாமி இராட்சதப் பேரலை அனர்த்தத்தினால் இலங்கைத் தீவில் பெரும் பகுதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதில் வடக்கு, கிழக்கு, மற்றும் தென்மாகாணம் ஆகிய மூன்று மாகாணங்களும் மீளவும் இயல்பு நிலைக்கு திரும்புவது என்பது 03,04 மாதங்களுக்குச் சாத்தியமான ஒன்றாக அமையப் போவதில்லை.

சுனாமி இன பேதங்களையும் ஏற்றத்தாழ்வுகளையும் ஓரங்கட்டி விட்டு எல்லோரையும் சம அந்தஸ்தில் தாக்கியிருக்கின்றது. இதனால் குறித்த பிரதேசங்களில் பொருளாதாரம், கல்வி, வாழ்வியல் என்பன படுமோசமாகப் பாதிப்படைந்துள்ளது. எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கல்குடா வலயத்தில் 300 பட்டதாரிகள் நியமனம்

(இ.மகேசன்)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச துறைகளில் வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் பயிற்சியளிக்கப்பட்ட பட்டதாரிகளில் 300 பேருக்கு கல்குடா கல்வி வலயத்தில் பயிலுனர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கோறளைப்பற்று வடக்கு பிரதேசத்துக்கு 100 பேரும் கோறளைப் பற்றுக்கு 100 பேரும் கோறளைப் பற்று மேற்குப் பிரதேசத்திற்கு 35 பேரும் ஏறாவூர்ப் பற்று-02 பிரிவுக்கு 65 பேருமாக 300 பேருக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

9 மாத காலத்துக்கு பயிலுனர் ஆசிரியர்களாக கடமையாற்றும் இவர்களுக்கு 6000 ரூபா படி வழங்கப்படுவதுடன் பயிற்சி கால முடிவில் ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்க்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## களுவன்கேணி மீனவர் கிராமத்தில் 1200 குடும்பங்கள் முற்றாகப் பாதிப்பு

(டிலு)

ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள களுவன்கேணி-01 களுவன்கேணி-02 ஆகிய இரு கிராம சேவகர் பிரிவுகளிலும் மீனவர் குடும்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றார்கள். இக்கிராமத்தில் அண்மையில் ஏற்பட்ட சுனாமி கடற்கோளினால் சுமார் 1200 குடும்பங்கள், சொத்து, தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

15 பேர் உயிரிழந்துள்ளனர். வெளி இடங்களுக்கு தொழிலுக்காகவும் சொந்த இடங்களுக்காகவும் சென்ற இவ்விரு கிராமத்தினைச் சேர்ந்த 50 பேர் இதுவரை வீடு திரும்பவில்லை. முல்லைத்தீவுக்குச் சென்ற ஒரு குடும்பஸ்தர் மட்டும் தமது மனைவி மக்களை இழந்த நிலையில் வீடு திரும்பியுள்ளார் என களுவன்கேணி-01 கிராம சேவக அலுவலர் எஸ்.அரியராஜா தெரிவித்தார்.

களுவன்கேணிக் கிராமத்தில் வாழ்ந்த மீனவர்களின் தொழில் வலம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. கடல் கொந்தளித்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை ஊருக்குள் பரவியுள்ளது.

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இவ்விரு கிராம சேவகர் பிரிவுகளையும் சேர்ந்த 532 குடும்பங்கள் களுவன்கேணி சிங்காரத்தோப்பு சரஸ்வதி வித்தியாலயத்திலும், 619 குடும்பங்கள் களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலயத்திலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருந்தனர். தற்போது தங்களது வீடுகளுக்கும், உறவினர்களின் வீடுகளுக்கும் சென்றுள்ளனர்.

## கல்முனை முஸ்லிம் பிரதேச செயலக பிரிவில் 7076 குடும்பங்கள் தங்கவைப்பு

(மருதமுனை நிருபர்)

சுனாமி அனர்த்தத்தினால் கல்முனை முஸ்லிம் பிரிவு பிரதேச செயலகப்பிரிவில் 14அகதி முகாம்களில் 7076 குடும்பங்களைச் சேர்ந்த 24996 பேர் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் 7060ஆண்கள், 6789 பெண்களும், 11147குழந்தைகளும் அடங்குவர்.இது தவிர நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் அதிகமான குடும்பங்கள் தங்கியிருக்கின்றன.

மருதமுனையில் மஸ்ஜிதுல் ஹீதா, அல்மனார் ஆரம்பப் பிரிவு, மக்கள்மண்டபம், மத்திய பள்ளிவாயல், அல்ஹம்றா வித்தியாலயம் ,அல் மினன் வித்தியாலயம்,பொது நூலகக் கட்டிடம், கல்முனையில் பஹ்ரியா வித்தியாலயம், அல்ஹா் வித்தியாலயம், ஜாமியா ம.ஹி.அற கல்லூரி,மிஸ்பாஹ் வித்தியாலயம், சுகாதார மஹ்மூத் ம.க இஸ்லாமாபாத் ஆகிய முகாம்களிலேயே மக்கள் தங்கியுள்ளனர்.

### இடமாற்றம் மார்ச் வரை பிற்போடப்பட்டுள்ளது

கல்குடா வலயத்திலிருந்து மட்டக்களப்பு பட்டிருப்பு வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரிய இடமாற்றமங்கள் மார்ச் மாதம் வரைக்கும் பிற்போடப்பட்டன.

மேற்படி வருடாந்த இடமாற்றத்தின்படி 35 ஆசிரியர்கள் கல்குடா வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

## "சுனாமி" அரச நிவாரணம் வாரமொன்றுக்கு ஒருவருக்கு 2 கிலோ 800 கிராம் அரிசி

(மருதமுனை நிருபர்)

"சுனாமி" கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கல்முனை முஸ்லிம் பிரிவு பிரதேச செயலகத்திற்குட்பட்டோருக்கு உலக உணவுத் திட்ட அமைப்பினால் வழங்கப்பட்ட உலர் உணவு புதன்கிழமை முதல் கூட்டுறவுக் கிளை கடைகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு நபருக்கு 2.800 கிலோ அரிசியும், 420 கிராம் பருப்பும், 210 கிராம் சீனியும் வாரமொன்றுக்கு வழங்கப்பட்டு வருகிறது. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மேலுள்ள பொருட்களின் அளவு அதிகரிக்கும். பாதிக்கப்பட்டவர்கள் அந்தந்தக் கிராமங்களிலுள்ள கூட்டுறவுச் சங்க கிளைக் கடைகளின் மூலம் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அட்டைகளைக் காட்டி உலர் உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்ள முடியுமென கல்முனைப் பிரதேச செயலாளர் ஏ.எச்.எம்.அன்ஸார் தெரிவித்தார்.

## இராணுவ பொலிஸ் முகாம் பகுதிகளில் மிதிவெடி அபாயம்; மக்கள் அப்பகுதிக்கு செல்லத்தடை!

(டிலு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக இராணுவ மற்றும் பொலிஸ் முகாம்கள் அமைக்கப்பட்டிருந்த இடங்களில் மிதிவெடி அபாயம் நிலவுவதால் அவ்விடங்களுக்குப் பொதுமக்கள் செல்வதற்கு இராணுவத்தினர் முற்றாகத் தடை விதித்துள்ளனர்.

மட்டு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடு, வேம்பு மற்றும் கற்குடா, பாசிக்குடா போன்ற பிரதேசங்களிலேயே மிதிவெடி அபாயம் அதிகமாக நிலவுவதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனை கற்குடா கடற்கரையோரமாக அமைக்கப்பட்டிருந்த இராணுவப் பயிற்சி முகாம் இராணுவத்தின் 232 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தலைமையகம், கல்குடா பொலிஸ் நிலையம் என்பன சுனாமி அனர்த்தத்தினால் முற்றாகச் சேதமடைந்துள்ளன. இதனால் இம்முகாம்களைச் சுற்றி இராணுவத்தினரால் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் நீரினால் அடித்துச் செல்லப்பட்டு அருகில் உள்ள மக்கள் வசிக்கும் பிரதேசங்களுக்கு சென்றிருப்பதால் இப்பிரதேசங்களில் மிதிவெடி அபாயம் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அதேபோல் மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடியில் அமைந்துள்ள இராணுவப் பயிற்சி முகாமும் சேதமடைந்துள்ளது. இவ் இராணுவ முகாமைச் சுற்றி புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் நீரினால் அடித்துச் செல்லப்பட்டு அருகில் மக்கள் வசிக்கும் பிரதேசங்களுக்கு சென்றிருப்பதால் அப்பிரதேசங்களிலும் விழிப்பாக இருக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்கள் தோறும் முகாமைத்துவ குழுக்கள்

(அ.தர்மா)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பணிகளை சரியான முறையில் மேற்கொள்வதற்காக அம்பாறை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதேசசெயலகம் தோறும் மீள் கட்டுமான முகாமைத்துவக் குழுக்களை அமைத்து வருகின்றனர்.

கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் வாசுதேவன் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு நாவிதன்வெளிப் பிரதேச செயலாளர் எம்.கோபாலரெத்தினம் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார். தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகப் பொறுப்பாளர் மார்ஷல், அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் குயிலின்பன், அம்பாறைமாவட்ட நிருவாகப் பொறுப்பாளர் முரளி, அரசியல் துறையைச் சேர்ந்த ரதன் மற்றும் தலைமைச் செயலகப் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், தமிழ் முஸ்லிம் பொதுமக்கள் சமூகமளித்திருந்தனர். அரசசார்பற்ற நிறுவனங்களான, சர்வோதயம்,தமிழர் புனர்வாழ்வுக்கழகம், சேவா, மனித அபிவிருத்தி மையம் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்கும் உதவுவதாகத் தெரிவித்தனர்.

## வீடுகளை இழந்தவர்களுக்கு விசேட வீடமைப்பு

(இ.மகேசன்)

சுனாமி அனர்த்தம் காரணமாக வீடுகளை இழந்தவர்களுக்கென விசேட வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

வீடுகள் அரச காணிகளில் மாடி வீட்டு முறையில் கட்டி கொடுக்கப்படவுள்ளதுடன் சுயமாகக் கட்டக் கூடியவர்களுக்கு அதற்கான நிதி உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தேசிய அனர்த்த முகாமைத்துவக் குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ள இவ்வேலைத் திட்டத்துக்கு வெளிநாடுகளின் மூலம் வழங்கப்படும் நிதிகள் பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விவசாயச் செய்கை பாதிப்புற்றோர் விபரம் திரட்டப்படுகிறது

(நமது நிருபர்)

கடந்த மாதம் ஏற்பட்ட கடல்கோள் அனர்த்தம் காரணமாக பயிர் செய்கை ரீதியாக ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றிய தகவல்களை சேகரித்து வருவதாக ஏறாவூர் பிரதேச விவசாய போதனாசிரியர் எஸ்.தவமணி தெரிவித்தார்.

ஏறாவூர் பற்று பிரதேசத்தில் பயிர்ச்செய்கையில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களின் இழப்புக்கள் பற்றிய விபரங்களை உடனடியாக அறியத்தருமாறு கேட்டுள்ளார்.விவசாயப் போதனாசிரியர் திருமதி எஸ்.தவமணி அவர்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களைக் கொடுப்பதன் மூலம் எதிர்கால நஷ்டஈட்டு நிவாரணங்களைப் பெறக்கூடியதாக இருக்கும் என்றார்.

## களப்பில் வாங்கிய மீனுக்குள் குழந்தையின் கைச்செயின்

(இ.மகேசன்)

களப்பில் பிடிக்கப்பட்ட கயல் மீனின் வயிற்றினுள் கைச்செயின் இருந்து மீட்கப்பட்டுள்ளது. வாவியில் பிடிக்கப்பட்ட கயல் மீனை ஆரையம்பதியைச சேர்ந்த குடும்பஸ்தர் வாங்கி சமைப்பதற்காக வெட்டிய போது அரைப் பவுண் எடையுள்ள கைச் செயின் ஒன்று மீனின் வயிற்றினுள் காணப்பட்டது.

## பதினைந்து நாட்களின் பின்பு குளியலறையிலிருந்து சடலம் மீட்பு

(டிலு)

சுனாமி அனர்த்தத்தில் பலியான யுவதி ஒருவரின் உருக்குலைந்த சடலம் ஒன்றை மட்டக்களப்பில் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள பிரிட்டன் இராணுவ மீட்புப் பணியினர் 15 நாட்களுக்குப் பின் மீட்டெடுத்துள்ளனர்.

இச்சம்பவம் டச்பார் (கல்லடி) கிராமத்தில் இடம் பெற்றுள்ளது. 26ஆம் திகதி கடல் வருகிறது என மக்கள் சிதறி ஓடிய போது மேற்படி யுவதி குளியல் அறையில் குளித்துக் கொண்டிருந்துள்ளார். அவரது பெற்றோர் தப்பி விட்டனர்.

ஆனால் யுவதிக்கு அவர்களின் பின்னால் ஓடி வர முடியவில்லை. இவரின் சடலமும் உறவினர்களுக்கு கிடைக்கவில்லை. ஆனால் தமது வீட்டில் தேடிப் பார்க்கத் தவறி விட்டனர். கடந்த 9 ஆம் திகதி மீட்புப் பணியினர் இடிபாடுகளை அகற்றும் போது அதே வீட்டின் இடிபாடுகளுக்குள் இருந்து யுவதியின் சடலத்தை மீட்டுள்ளனர். இந்த இளம் யுவதி களுவாஞ்சிகுடி மக்கள் வங்கி உத்தியோகஸ்தர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்-பாலையடித்தோணா மக்களுக்கு அரச நிவாரணம் கிடைக்கவில்லை

(நமது நிருபர்)

சுனாமி அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மட்/பாலையடித்தோணா கிராமத்தைச் சேர்ந்த 67 குடும்பங்களைச் சேர்ந்த 350 பேர் மட்.சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் கடந்த மாதம் 26ம் திகதி முதல் தங்கியுள்ளனர்.

இந்த நலன்புரி நிலையத்தை சந்திவெளிக் கிராமத்தைச் சேர்ந்த 'எக்கோ' விளையாட்டுக் கழகத்தினர் கவனித்து வருகின்ற போதிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் பி.டபிள்யூ.ஓ. போன்றவற்றால் கிடைக்கும் பொருட்களைக் கொண்டே உணவு வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் அரசாங்க நிவாரணம் கிடைக்காமையால் அன்றாட உணவுத் தேவையைக் கூட சரிவர நிறைவேற்ற முடியாதுள்ளதாகவும் பொறுப்பாளர் கூறினார்.

# திருமலை அரசியல் பொறுப்பாளர் எழிலன் சிறிலங்கா படையினரால் மறித்து சோதனை

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் 30 நிமிடங்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் வழிமறிக்கப்பட்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் மதியம் 12.10 மணியளவில் கட்டைப்பறிச்சான் இராணுவ சோதனைச் சாவடியில் இடம்பெற்றுள்ளது.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ட்ரோன் புறூவ் ஹொவ்டேயுடனான சம்பூர் சந்திப்பினை முடித்துக் கொண்டு திருகோணமலை திரும்புகையிலேயே இச்சம்பவம் இடம் பெற்றது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது: கட்டைப்பறிச்சான் சோதனைச் சாவடியில் வைத்து விடுதலைப்புலிகள் பயணம் செய்த வாகனத்தில் வந்தோரை இராணுவத்தினர் சோதனையிடுவதற்காக தத்தமது பயணப்பொதிகளுடன் இறங்கி வருமாறு இராணுவத்தினர் பணித்தனர்.

விடுதலைப்புலிகள் இறங்கிச் செல்ல மறுத்து விட்டனர். அடையாள அட்டைகளைப் பதிவு செய்வதற்காக தமது உறுப்பினர் ஒருவரை அடையாள அட்டைகளுடன் அனுப்பி வைத்தனர்.

இராணுவத்தினர் வாகனத்தில் உள்ள சகலரும் இறங்கிவர வேண்டும் என பணித்தனர். அதற்கு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் மறுத்து விட்டார். இதன் பின்னர் அதில் பயணம் செய்த போராளிகள் இறங்கிச் சென்றனர். எழிலன் இறங்க மறுத்து விட்டார். இதனால் இரு தரப்பினருக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியது.

இச்சம்பவம் தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்குத் தெரிவிக்கப்பட்டது. போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மொழி பெயர்ப்பாளர் சம்பவ இடத்திற்கு வந்து இராணுவத்தினருக்கு நிலைமையை எடுத்துக் கூறியும் அவர்கள் சம்மதிக்கவில்லை.

பின்னர் இராணுவம் விடுதலைப்புலிகளின் வாகனத்திற்கு வந்து அரசியற்துறைப் பொறுப்பாளரின் பயணப் பொதியினைச் சோதனையிட்ட பின்னர் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

விடுதலைப்புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் கட்டைப்பறிச்சான் இராணுவ முகாம் ஊடாக பயணம் செய்யும் வேளைகளில் அண்மைக்காலமாக இராணுவம் இவ்வாறான நடவடிக்கையினை மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டுள்ளது என்றும் தன்னை யார் என்று தெரிந்தும் இராணுவத்தினர் வேண்டுமென்றே எங்களைச் சீண்டுவதற்காக இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது ஆரோக்கியமான ஒரு செயற்பாடு அல்ல என விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார். கடந்த மாதம் 18ம் திகதியும் இவ்வாறு இவர் திருகோணமலையில் இருந்து சம்பூருக்கு செல்லும் வழியில் இம் முகாமில் அரைமணி நேரம் வரை வேண்டுமென்று தடுத்து நிறுத்தப்பட்டார்.

அதேபோன்று மழை வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஈச்சிலம்பற்று பிரதேச மக்களைப் பார்வையிட மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை மகிந்தபுரம் இராணுவ சோதனைச் சாவடியில் வைத்து தடுத்து நிறுத்தப்பட்டு பின்னர் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டார்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உள வளப் பயிற்சி

(ஹரிச்சந்திரன்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு மட்டக்களப்பு நலன்புரி நிலையங்களில் தங்கியிக்கும் சிறுவர்களின் மன அழுத்தங்களை குறைப்பதற்காகவும், மீண்டும் மகிழ்ச்சியான சூழ்நிலைக்கு அவர்களை கொண்டு வருவதற்காகவும், மட்டக்களப்பு திருமறைக் கலாமன்றத்தால் இத்துறையில் விசேட பயிற்சி பெற்ற உறுப்பினர்களைக் கொண்டு செயற்றிட்டம் ஓன்று செயல்படுத்தப்படுகின்றது.

மட்டக்களப்பு இந்துக்கல்லூரி நலன்புரிமுகாமில் தங்கியிருக்கும் சிறுவர் சிறுமியர்களுக்கான உளவள பயிற்சியை முதற்கட்டமாக ஆரம்பித்துள்ள மட்டக்களப்பு திருமறைக்கலாமன்ற பயிற்சியாளர்கள் சிறுவர்களிடையே நம்பிக்கையை, மகிழ்ச்சியை, ஒற்றுமையை ஏற்படுத்தும் வேலைத்திட்டத்தில் ஈடுபட்டார்கள்.

தொடர்ந்து மற்றைய நலன்புரி நிலையங்களுக்கும் தமது இத்திட்டத்தைவிரிவுபடுத்த இருப்பதாக மன்ற இணைப்பாளர் தெரிவித்தார்

# கல்லாறு அகதி முகாம்களுக்கு ஐ.சி.ஆர்.சியால் வீட்டு பொருட்கள்

(எம்.யுவராஜ்)

சுனாமி ஆழிப் பேரலையினால் தமது இருப்பிடங்களை இழந்து பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்பு கிளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவுடன் இணைந்து பல்வேறு நிவாரணப்பணிகளை மேற்கொண்டு வருகின்றது. நேற்று முன்தினம் கல்லாறு அகதி முகாமில் தஞ்சமடைந்துள்ள சுமார் 628 குடும்பங்களுக்கு வீட்டுப்பாவனைப் பொருட்களை வழங்கியுள்ளனர். அத்துடன் வாகரை பாம் கொலனியில் 216 குடும்பங்களுக்கும், மாங்கேணி மத்தியில் 55 குடும்பங்களுக்கும் மாங்கேணி தெற்கில் 77 குடும்பங்களுக்கும், பனிச்சங்கேணியில் 516 குடும்பங்களுக்கும், காயான்கேணியில் 9 குடும்பங்களுக்கும் சுமார் மூன்று வாரங்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்களை வழங்கியுள்ளனர்.

மக்களின் தேவையை அறிந்து அதனை மதிப்பீடு செய்து அதற்கேற்ப இவ்வாறான நிவாரணப் பணிகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்புக் கிளை மேற்கொண்டு வருவதுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசங்களை துப்பரவு செய்யும் பணியில் சுமார் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் ஈடுபட்டு வருகின்றதாகவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க மட் கிளைத் தலைவர் த.வசந்தராஜா தெரிவித்தார்.

# உதைப்பந்தாட்ட வீரர்களுக்கு வீடுகள் அமைக்க நடவடிக்கை

(செ.பேரின்பராசா)


கடல் பேரலை காரணமாக தமது வீடு வாசல்களை இழந்த உதைப்பந்தாட்ட வீரர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் முகாமையாளரும், பணிப்பாளருமான வீ.மணிலால் பெர்ணாண்டோ முன்வந்துள்ளார்.

எனவே கடற்கோள் காரணமாக வீடுகளை இழந்த அம்பாறை மாவட்ட காற்பந்தாட்டச் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் உதைப்பந்தாட்ட வீரர்கள் தமது இழப்புக்கள் பற்றிய விபரங்களை வீ.மணிலால் பெர்ணாண்டோ, முகாமையாளரும், பணிப்பாளரும், இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளன சுதந்திர சதுக்கம், கொழும்பு-7 என்ற விலாசமிட்டு அனுப்பி வைக்குமாறும், இதன் பிரதியை ஏ.எம்.இப்றாஹிம், பொதுச் செயலாளர், அம்பாறை மாவட்ட காற்பந்தாட்டச் சம்மேளனம், மருதமுனை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# நிவாரண பணியில் சரீரம்

(நிசாந்தன்)

தாழங்குடாவில் அமைந்துள்ள சரீரம் சிறிலங்கா தேசிய மன்றத்தினர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி, பாலமுனை, தாழங்குடா, செட்டிபாளையம், களுவாஞ்சிகுடி, களுதாவளை, பட்டிருப்பு போன்ற அகதி முகாம்களுக்கு உணவுப் பொருட்கள், ஆடைகள் போன்றவற்றை அம்பாறை மாவட்டத்திலும் வழங்கியுள்ளனர்.



அண்மையில் ஏற்பட்ட சுனாமியினால் உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி கொக்கட்டிச்சோலை கதிரொளி இல்லத்தில் நேற்று நடைபெற்ற பிரார்த்தனையில் கலந்து கொண்ட சிவதொண்டன் எஸ்.துரையப்பா,கதிரொளி இல்லப் பொறுப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் மற்றும் இல்லச் சிறார்களையும் படத்தில் காணலாம். (படப்பிடிப்பு:-எம்.யுவராஜ்)

# மட்.அம்பாறை மாவட்டத்தில் 3100 சிறார்கள் பெற்றோரை பிரிந்துள்ளனர்

## யுனிசெப் அறிக்கையில் தெரிவிப்பு

(நமது நிருபர்)

இலங்கையில் ஆழிப்பேரலை காரணமாக 858 சிறுவர்கள் தமது பெற்றோர்களிடம் இருந்து பிரிந்துள்ளதாக யுனிசெப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டன. இதன்படி மட்டக்களப்பில் மாத்திரம் 346 சிறுவர்கள் தமது பெற்றோர்களை பிரிந்துள்ளனர்.

இதேவேளை நாடு முழுவதும் ஆழிப்பேரலை காரணமாக பெற்றோரில் தந்தையை அல்லது தாயை இழந்த சிறுவர்களின் எண்ணிக்கை 3,202 ஆகும். இதில் அம்பாறையில் மாத்திரம் 954 சிறுவர்கள் உள்ளடங்குகிறார்கள்.

இந்த நிலையில் தற்சமயம் யுனிசெப் நிறுவனம் சிறுவர்களை பாதுகாக்கும் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. சிறுவர் துஸ்பிரயோகம், சிறுவர் கடத்தல் என்பவற்றில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காக தமது உறுப்பினர்களை அதிகமாக களத்தில் ஈடுபடுத்தவுள்ளதாகவும் இன்றைய ஊடக மாநாட்டில் யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி டெட் சைபான் தெரிவித்தார்.

இதற்கிடையில், கிழக்கில் ஒருசில சிறுவர்கள், நலன்புரி முகாமிலிருந்து வெளியேறியுள்ளார்கள் என்றும், அவர்களை அவர்களது உறவினர்கள் அழைத்துச் சென்றிருந்தால் தமக்குத் தகவல் தரும்படியும் யுனிசெப் பிரதிநிதி கேட்டுள்ளார்.

இந்தத் தகவலைத் திரித்து வெளியிட்டுள்ள சிங்கள இனவாத ஊடகங்கள், விடுதலைப் புலிகள் சிறுவர்களை அமைப்பில் சேர்க்க முயற்சித்ததாக வழமைபோன்று விசமப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன.

இத்தகைய தகவல் குறித்து கண்காணிப்புக் குழுவினரிடம் கேட்டபோது, அப்படியெதுவும் நிகழவில்லையென்றும், கிழக்கில் சிறுவர்களைத் தம் படையில் சேர்ப்பது குறித்து யோசிக்கும் நிலையில் விடுதலைப் புலிகள் தற்போது இல்லை என்றும், தற்போதைய அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களைப் பராமரித்து உதவி வழங்குவதில் அவர்கள் மிகவும் கடுமையாக உழைப்பதாகவும் குறிபிட்டுள்ளார்.

# அம்பாறை மாவட்ட அனர்த்த நிவாரண பணிகளில் அதிரடிப்படையினர் தலையீடு

## குற்றம் சாட்டுகிறார் தமிழினி

(நமது நிருபர்)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண விநியோகத்தில் சிறிலங்கா இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் தலையீடுகள் தொடர்வதாக எமது செய்தியாளர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினரின் தலையீடுகள் ஏற்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்துள்ளார்.

தமது நிவாரணப் பணிகளை விசேட அதிரடிப் படையினர் புகைப்படம் எடுப்பதற்கு தடை விதித்த சம்பவங்கள் கூட இடம்பெற்றதாகக் கூறிய இவர், மக்கள் படும் துன்ப துயரங்களை ஆவணப்படுத்தி சர்வதேச சமூகத்திற்கு கொண்டுவர வேண்டிய பொறுப்பு உண்டு என்றும் குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில் இப் பிரதேசத்திற்கு நிவாரண உதவிகள் கிடைத்த போதிலும் அது சகலருக்கும் கிடைப்பதற்கான ஒழுங்குகள் இருக்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்களில் ஒரு பகுதியினருக்கு அது சென்றடையவில்லை. தற்போது சகலருக்கும் நிவாரணம் கிடைக்கக் கூடிய வாய்ப்பு எங்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் ஏனைய பெண்களைப் பொறுத்த வரை அவர்களுக்குரிய ஆடைகள் தொடர்பாக சில பிரச்சினைகள் உள்ளன.

# சுனாமியால் பாதிப்புற்றோருக்கு ஒக்ஸ் போட் இலவசக் கல்வி

(நிசாநதன)

சுனாமி எனும் பேரலையில் சிக்கி தமது வீடு மற்றும் சொத்து இழப்புக்களுக்கு ஆளான களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் கல்வி கற்கின்ற மாணவ மாணவியருக்கான பிரத்தியேக கல்வியை இலவசமாக வழங்குவதற்கு களுதாவளை ஒக்ஸ் போட் கல்வி நிலையத்தினர் முன்வந்துள்ளனர்.

மேற்படி கல்வி நிலையமானது இன்று வரை தம்மாலான கல்வி, கலாசாரம், விளையாட்டு என அனைத்து சேவைகளையும் வழங்கி வருகின்ற இலங்கேசன் இந்து மன்றத்தின் கீழ் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. அண்மையில் சுனாமியால் பாதிப்புற்ற களுதாவளைப் பிரதேச மக்களுக்கு சமைத்த உணவினையும் வழங்கி வந்தனர்.

# சிறிலங்கா இராணுவம் போரைத் திணித்தால் மக்களை காக்க புலிகள் போரை எதிர்கொள்வர்.

சிறிலங்கா அரசும் இராணுவமும் நடந்து கொள்கின்ற நடவடிக்கைகளை வைத்துத்தான் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிக்கலாம்.

அதே வேளை விடுதலைப்புலிகள் வலிந்து போரை திணிக்கமாட்டார்கள் சிங்களப் படைகள் போரைத் திணிக்க முனைந்தால் மக்களைக் காக்க போரை எதிர்கொள்ள வேண்டி வரும்

இவ்வாறு தமிழீழ அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வன் அவர்கள் கனேடிய வானொலி மற்றும் ஏ.பி.ஏ. செய்தி நிறுவனத்திற்கும் வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வழங்கிய செவ்வியின் முழு விபரம் வருமாறு.

**கேள்வி:-** *வட பகுதிக்கு ஐ.நா செயலர் கொபி அனான் வருகை தராதது குறித்து என்ன கருதுகின்றீர்கள்?*

**பதில்:-** ஐ.நா செயலாளர் நாயகம் தென்னாசியாவிற்கான ஒரு மனிதாபிமானப் பயணத்தை மேற்கொண்டு இருந்தார். அந்த வகையில் இலங்கைத் தீவில் மிகவும் மோசமாக இயறகை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சகல பகுதிகளுக்கும் வருவார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

தமிழ் மக்களுக்கு நிறையவே எதிர்பார்ப்பு இருந்தது. ஏனெனில், இயற்கையின் சீற்றத்தால் தமிழர் தாயகப் பகுதியே பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்தது.

அது மட்டுமல்ல இருபது வருட கால யுத்தத்தில் பெரும் அழிவுகளைச் சந்தித்த பகுதிகளாக தமிழர் தாயகப் பகுதிகள் இருந்ததால் ஐ.நா செயலாளர் நாயகம் தமிழர் தாயகப் பகுதிக்கு வருவார் என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கு இருந்தது. ஆனால் அவர் வருகை தராதது மிகவும் ஏமாற்றத்தையும் கவலையையும் தருகிறது.

குறிப்பாக ஐ.நா சபை உலகத்தில் வாழும் அத்தனை மக்களுக்கும் பொதுவான ஒரு அமைப்பாக பார்க்கப்படுகிறது. அந்த வகையில் பாதிக்கப்பட்ட மக்கள், மிகவும் பேரழிவைச் சந்தித்த மக்கள் என்ற வகையில் ஐ.நா செயலாளர் கட்டாயமாக வருகை தந்து எங்கள் மக்களை நேரடியாகச் சந்தித்து, ஆறுதல் அளித்து அவர்களுக்கான உதவித் திட்டங்கள் தொடர்பான அறிவுறுத்தலைச் செய்திருக்க வேண்டும். அவர் வருகை தராதது மிகவும் ஏமாற்றத்தையும் கவலையையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு குறிப்பாக இலங்கை அரசாங்கம் எப்படித் தமிழர்களை புறக்கணிக்கின்றது, தமிழர் பகுதிகளை எப்படி பாகுபாட்டோடு பார்க்கின்றது என்பதையும் இலங்கை அரசா ங்கத்தின் தீவிரமான போக்கை, பாகுபாட்டையும் வெளிப்படுத்தியிருக்கின்றது. எமது மக்களும் சிந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

**கேள்வி:-** *சுனாமி அனர்த்தத்தின் பின்பு, கொபி அனான் விஜயம் செய்வதற்கு முன்பு, இடைப்பட்ட காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான உறவு நிலையின் இடைவெளியை செப்பனிடக்கூடிய சந்தர்ப்பம் இருந்தாக நீங்கள் கருதுகிறீர்களா?*

**பதில்:-** எங்களைப் பொறுத்தவரை சுனாமி பேரனர்த்தத்திற்கு முன்னால் பேச்சுவார்த்தைகள் சமாதான முயற்சிகள் எல்லாம் இறுக்கம் அடைந்த ஒரு நெருக்கடியான நிலை காணப்பட்டது. இலங்கை அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஆக்க பூர்வமான முன்னெடுப்புக்களை முன்னெடுக்காது தங்களுடைய அரசியல் அதிகாரத்தை பேணுகின்ற அதிகாரப் போட்டிகளில் மட்டுமே கவனம் செலுத்தி வந்தது. ஆகவே, சமாதான முயற்சிகள் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டிருந்தது.

சுனாமி பேரனர்த்தம் பொதுவாக பேரழிவை எல்லா இன மக்கள் மத்தியிலும் ஏற்படுத்திய சூழலைப் பயன்படுத்தி, இலங்கை அரசாங்கம் மனிதாபிமான கண்ணோட்டத்துடன் தமிழ் மக்களையும் புலிகளையும் பார்த்து அவர்களுடன் இணைந்து இந்த மனிதாபிமானப் பணிகளை முன்னெடுக்கும் என்ற எதிர்பார்ப்பு சகல மட்டத்திலும் இருந்தது. ஆரம்பத்தில் அதற்கான அறிகுறிகள் தென்பட்டன்.

ஆனால், எந்த நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளாத இடத்து குறிப்பாக சர்வதேச சமூகத்தின்உதவிகளைத்தெற்கிற்கு வழங்குகின்ற அளவை பாதிக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் வடக்கு கிழக்கு பகுதிக்கு அதை பகிர்ந்தளிக்கும் எந்தவித முயற்சிகளும் இல்லாத காரணத்தினால், தமிழ் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளார்கள். அந்த ஏமா ற்றம் அடைந்த சூழலில் ஐ.நா செயலாளர் நாயகம் வருகின்ற போது அவர் இந்தப் பகுதிக்கு வந்து பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிடுவார், உதவிபுரிவார். என்று நம்பி இருந்த தமிழ் மக்களுக்கு ஐ.நா செயலரின் வருகையினை தடுத்த நடவடிக்கை ஏமாற்றம் அளித்துள்ளது. ஒட்டு மொத்தமாக நம்பிக்கையற்றிருந்த சமாதான முயற்சிகள் மீண்டும் துளிர்க்கும் என்ற நம்பிக்கைகள் எல்லாவற்றையும் சிதறடிக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்தின் அண்மைய செயற்பாடுகள் அமை ந்துள்ளன.

**கேள்வி:-** *கனேடிய பிரதமர் இலங்கை வருவதாக இருக்கின்றது. அவரை வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு கூட்டி வருவதற்கான ஏற்பாடுகள் இருக்கின்றதா?*

**பதில்:-** கனேடிய பிரதமரின் பயணம் என்பது மனிதாபிமான ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களின் சகல பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறுவது தான் பொருத்தமாக இருக்கும். அந்த வகையில் கனேடிய பிரதமருக்கு இன்னொரு பொறுப்பு இருக்கின்றது. கனடாவில் புலம் பெயர்ந்த மூன்று இலட்சம் வரையான தமிழ் மக்கள் வாழ்கின்றனர். அந்த வகையில் கனடா பிரதமர் இங்கு வருகின்ற போது தமிழ் மக்களுடைய மனங்களைப் பாதிக்காத வகையில் அவரது பயணம் இடம்பெற வேண்டும்.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேச மக்களை நேரடியாகச் சந்தித்து ஆறுதல் அளித்துச் செல்வதை ஓர் அங்கமாகக் கொள்ள வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு.

## தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் கனேடிய வானொலிக்கும் ஏ.எவ்.பி.செய்தி நிறுவனத்துக்கும் வழங்கிய பேட்டி.

தமிழ் மக்களின் விருப்பமும் அதுவே. இது தொடர்பாக கனடா தூதரகம் மூலம் தமிழ்மக்கள் சார்பாக அழைப்பு விடுத்துள்ளோம். கனடா பிரதமர் தமிழர் பகுதிக்கு வருவார் என்று நம்புகிறோம்.

**கேள்வி:-** *தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதப் பட்டியலில் இட்டு வைத்திருக்கும் அமெரிக்கா, இலங்கையில் தளம் அமைப்பது, 1500 இராணுவ வீரர்கள் இங்கு வந்து பணிபுரியும் திட்டம் தொடர்பில் விடுதலைப் புலிகளின் உணர்வுகள் எப்படி?*

**பதில்:-** தென்னாசியாவில் ஏற்பட்ட இயற்கைப் பேரனர்த்தத்தலில் இருந்து இலங்கை மீள்வதற்கு பல நாடுகள் உதவிபுரிய முன்வந்துள்ளன. அந்த வகையில் பல நாடுகள் பல விதமான உதவிகளைப் புரிந்து வருகின்றன.

அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, பங்களாதேஸ், கனடா போன்ற நாடுகளும் மீட்புப் பணிக்கான தங்களின் இராணுவ,

விஞ்ஞான உதவிகளை ஒரு மனிதாபிமான நோக்கோடு செய்து வருகின்றன என்று நாம் கருதுகின்றோம். அந்த அடிப்படையில் அமெரிக்கா உட்பட ஏனைய நாடுகளும் தென்னாசியாவின் பாதிக்கப்பட்ட அனைத்து நாடுகளிலும் மனிதாபிமான உதவிகளைப் புரிய வந்தவர்கள் என்ற அடிப்படையில் தான் பார்க்கிறோம். இதை நாம் தவறான கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டிய தேவை இந்தக் கட்டத்தில் இல்லை என்று நான் கருதுகிறேன். உலக நாடுகள் மனிதாபிமான உதவிகளை விரைந்து உதவுவது இயற்கை அனர்த்த நேரத்தில் சர்வதேச ரீதியில் வழமையானது. அந்த நிலையோடு தான் இன்றைய நிலையை நாம் ஒப்பிட்டுப் பார்க்கிறோம்.

**கேள்வி:-** *கொபி அனான் இங்கு வருகை தராதது குறித்து எதிர்மறை விளைவுகள் ஏற்படலாம் என்று ஒரு எச்சரிக்கைத் தன்மையினை விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். அதில் பாரிய விளைவுகள் என்று எதை நீங்கள் கருதுகின்றீர்கள்?*

**பதில்:-** அது எல்லோரும் எதிர்பார்க்கின்ற ஒரு ஒருமைப்பாடு, இணக்கப்பாடு தனித்தனியே ஏற்படுகின்ற இணைவு மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்கின்ற எல்லோரும் தந்த அணுகுமுறை சிதறடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, பொதுப்படையாகவே அதுவொரு பெரும் பாதிப்பாக எம்மாலும் தமிழ் மக்களாலும் உணரப்படுகின்றது.

ஏனெனில் இலங்கை அரசாங்கம் இணைந்து மனிதாபிமானப் பணியாற்றத் தயார் என்று அறிவித்துக் கொண்டு இருக்கின்றதே தவிர, ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்கள் எதனையும் முன்னெடுக்கவில்லை என்ற குறைபாட்டை ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளோம். அதை இன்னும் பாதிக்கும் வகையில் கொபி அனானின் விஜயம் புறக்கணிக்கப்பட்டுள்ளது; தடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் அது ஒரு பாரதூரமான விடயமாகத் தான் தமிழ் மக்களால் கொள்ளப்படுகின்றது.

**கேள்வி:-** *சீர் செய்ய முடியாத அளவிற்கு சமாதான முயற்சிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு விட்டது என்று நீங்கள் சொல்வதில் இருந்து யுத்தம் வரும் என்று சூசகமாகக் கொள்ளலாமா?*

**பதில்:-** விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் தலைமைப்பீடம் தனது நிலைப்பாட்டை ஏற்கனவே தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. விடுதலைப்புலிகள் வலிந்து யுத்தத்தை திணிக்கமாட்டார்கள். இலங்கைப் படைகள் தமிழ் மக்கள் மீது வலிந்து போரைத் திணிக்க முயன்றால் மக்க



ளைக்காக்க போரை எதிர் கொள்ள வேண்டிய கடப்பாடு புலிகளுக்குண்டு. அந்த வகையில் யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கும் என்று ஒரு தரப்பின் நிலைப்பாட்டை வைத்துக் கொண்டு கூறமுடியாது. இரண்டு தரப்பின் நிலைப்பாடாக உள்ளது. ஆகவே இலங்கை அரசும் படைகளும் நடந்து கொள்கின்ற நடவடிக்கைகளை வைத்துக் கொண்டு எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று தீர்மானிக்கலாம்.

**கேள்வி:-** *ஸ்ரீலங்கா அரசு கனடிய பிரதமரின் வடக்கு கிழக்கு பயணத்தை தடுத்து விடுமானால் அது உங்களை சீண்டி விடும் செயலாகக் கருதலாமா?*

**பதில்:-** இப்போது அதைப்பற்றிக் கூறமுடியாது. கனேடியப் பிரதமரும் தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்கின்றவர். கனடாவில் வாழ்கின்ற பல லட்சம் தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்தவர். அவர்களின் அபிமானத்தையும் ஆதரவையும் பெற்றவர் என்ற வகையில் அவர் ஆக்க பூர்வமான முயற்சிகளை மேற்கொள்வார் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இந்த நேரத்தில் விரிவான விளக்கம் கொடுப்பது பொருத்தமில்லை என்று நினைக்கின்றேன்.

**கேள்வி:-** *முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம் உடைந்து விட்டது என்றும் தலைவர் பிரபாகரன் உயிரிழந்து விட்டார் என்றும் தென்னிலங்கை ஊடகங்கள் பிரசாரம் செய்கின்றன. இது பற்றி தங்களின் கருத்து?*

**பதில்:-** தென்னிலங்கை ஊடகங்கள் எப்போதும் இப்படியான பிரசாரங்களைச் செய்வது வழமை. இந்த நேரத்திலும் பேரழிவைச் சந்தித்து நிற்கும் மக்களைக் குழப்பும் வகையில் மிகவும் கீழ்த்தரமான முறையில் பொய்ப் பிரசாரங்களைச் செய்வது கவலைக்குரிய விடயம். எமது தலைவருக்கோ தலைமைப்பீடத்துக்கோ ஏனைய உறுப்பினர்களுக்கோ ஏதாவது நடந்திருந்தால் நிச்சயமாகத் தெரிந்த விடயமாக இருக்கும். இப்படியான பொய்ப் பிரசாரங்களைச் செய்து மக்களைக் குழப்புவது சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பது நோக்கமாக இருக்கும். அந்த வகையில் கடற்புலிகள் பெருமளவு உயிரிழந்து விட்டார்கள் என்ற வதந்தியை முதலில் பரப்பினார்கள். அதில் உண்மை இல்லை.

உண்மை நிலை தெரிந்த பின்பு தலைவரைப் பற்றிய வதந்தியை பரப்பியுள்ளார்கள். இது தெற்கில் உள்ள ஊடகங்களின் வழமையான காரியமாக இருப்பதால் நாங்கள் பெரிதுபடுத்த வில்லை. தெற்கில் உள்ள பேரினவாத ஊடகங்கள் தமிழ் மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் எதிரான கருத்துக்களையும் வதந்திகளையும் தொடர்ந்து பரப்பி வருகின்றன. இதனை நாம் பெரிதுபடுத்த வில்லை. இந்தக் காலகட்டத்தில் வதந்தி பரப்பப்பட்டது தொடர்பாக தமிழ் மக்கள் கவலையடைந்துள்ளார்கள்.

**கேள்வி:-** *அப்படியென்றால் தலைவர் வெளியில் வந்து ஊடகங்களுக்கு படங்கள் கொடுக்கலாமே?*

**பதில்:-** இலங்கை அரசாங்கம் இவ்வாறான வதந்திகள் பரப்புவதை இன்று நேற்று அல்ல கடந்த 25 ஆண்டுகளாகச் செய்து வருகின்றது. இதற்காக தலைவர் தான் உயிருடன் இருப்பதாக வெளியில் வந்து காட்டிக் கொள்ளும் நிகழ்வு இடம்பெறவில்லை. அவர் தவறான பிரசாரங்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டு இருப்பதாக இருந்தால் எங்கள் விடுதலைப் போராட்ட அரசியல் பணிகளை முன்னெடுக்காமல் நேரத்தை வீண்விரயம் செய்ய வேண்டியிருக்கும்.

இந்த வகையில் தலைவர் இதையொரு பெரிய விடயமாக எடுத்து தான் உயிருடன் இருப்பதாக காட்டிக் கொள்ள விரும்பவில்லை. அவர் போராட்ட அரசியல் பணிகளை முன்னெடுத்து வருகின்றார். இதற்கெல்லாம் பதில் கூறிக்கொண்டிருந்தால் எங்கள் விடுதலை அமைப்பு பல நற்பணிகளில் இருந்து நேரத்தை வீணடித்துச் செல்லும்.

சிறுகதை

# அம்மா வலிக்குது!

கருக்கல் பொழுது

எங்கும் பரந்த இருள் தமிழனைச் சூழ்ந்திருக்கும் கரிய இருள் போல... அந்த இருளிலும் அந்த ஊரை அடையாளம் கண்டு கொண்டான்.

வந்தாறுமூலை

பத்து வருடங்களின் பின்பு அந்த மண்ணில் கால்டி பதிக்கின்றான். தொண்ணூறில் கிராமத்தை விட்டுப் பிரிந்த போது



கருகிப் போய்க் கிடந்த பூமி அப்படியே உரு மாறாமல் கிடந்தது.

மாற்றம் இல்லை.

ஆனால் பிண வாடையின் நாற்றம் மட்டும் இல்லை. கொஞ்சம் காடுகள் வளர்ந்து... இருளில் இருளாக நடந்தான். அவருடைய பாதங்கள் பதிந்த பூமி... வீட்டை அடையாளம் கண்டு கொள்கின்றன.

அதே வீடு பாதுகாப்பு சூனியப் பிரதேசமாக்க வெட்டி அழித்த மரங்கள் போக, எஞ்சிய வீட்டைச் சுற்றிய மரமுந்திரிகை மரத்திலிருந்து காற்றில் புரண்ட சருகுகள் சிதறிக் கிடக்கின்றன.

உள்ளே ஒரு சிறிய சிமிலி விளக்கு கண் சிமிட்டிக்கொண்டிருந்தது.

பாதங்களில் பட்டுத் தெறித்த சரக் சரக் என்ற சரிகின் ஒலி கேட்க வாசலில் படுத்துக் கிடந்த நாய் மெதுவாக எழுந்து உடலை வளைத்து சோம்பல் முறித்து அவனை நோக்கி வருகின்றது.

வாய் கிழியக் கத்தி ஊரைக் கூட்டும் நாய் ஏனோ குரைக்கவில்லை.

பாதங்களைத் தடவி தடவி நக்கி வாலாட்டியது.

நாய்க்குப் பத்து வயது. அவன் அந்த ஊரைப் பிரிந்து போயும் பத்து வருடங்கள் கட்டிப்பிடித்துத் தூக்கி விளையாடிய நாய் இன்று வயது முதிர்ந்து போனாலும் அவனை மறக்கவில்லை.

பத்து வருடங்களுக்கு முன்பு எவ்வளவு கலகலப்பாக இருந்த வீடு. திறந்து கிடந்த கதவால் எட்டிப்பார்த்தான்

அங்கே அதே நாய் போல வயது முதிர்ந்து... தலை நரைத்து... கன்னங்கள் குழி விழுந்து... அவனுடைய தாய் "அம்மா..." இந்த வேளையில் அம்மா... என்று யார் அழைப்பது? மனம் மௌனப் போராட்டத்தில் இறங்க குரல் வந்த திசையில் சிமினி விளக்கை தூக்கிய படி அவளின் பார்வைகள் அவனை மேய்கின்றன.

இது... அன்று பத்து வயது சிறுவனாக இருந்த மகன் இன்று மீசை முளைத்து 20 வயது கட்டிளங்காளையாக... அவள் முன்னே... "ஆ... " பேச... வார்த்தைகளைத் தொலைத்து நின்றாள். "அம்மா..." மண்டிக் கிடந்த மௌனத் திரையைக் கிழித்துக் கொண்டு அணைத்துக் கொண்டான்.

மடியில் பால் சுரக்கத் தவிர்த்த தாய்ப் பசுவின் அரவணைப்பில் இருந்த கன்றுக்குட்டியின் சுகம்...

புரியாத துக்கத்தில் உதடுகள்துடிக்க ... ஊமை இதழ்கள் விழிகளின் நீரை மேய்ந்தன.

அந்த அரவணைப்பின் சுகத்திலிருந்து அவன் மீளவில்லை. ஆனால்... சுவரில் தொங்கிய படங்கள் கண்ணில் பட்டுச் சிக்கித் தவித்தன.

அன்று அவனுடைய மனதில் நிரந்தரமாய்ப் படிந்து போய்க் கிடந்த நிழல்கள் நினைவுத் திரைகளாயின.

ஆகஸ்ட் தொண்நூறு

அன்று என்றுமேயில்லாத பரபரப்பு... ஊரே அல்லோலகல்லோலம். ஒருவருக்கும் ஒன்றுமே புரியவில்லை.

எல்லோருக்கும் ஏதோ ஒரு விபரீதம் நடந்திருக்க வேண்டும் என்று மட்டும் புரிந்தது.

அவர்களுக்குப் பதட்டம் என்னவோ ஏதோ என்று எண்ணிக் கொண்டு தெருவுக்கு ஓடி வந்தார்கள். அரசின் வார்த்தைகள் இலக்கின்றி நழுவியதால் சமாதானம் சிதறி... இரண்டாம் ஈழப்போர் தொடங்கி விட்டதாம். நிலமை மிக மோசமாக இருந்தது. சகோதர நாட்டில் இருந்து சமாதானத்திற்காக வாங்கிய சமாதான புக்காரா தாளப் பறந்து பயமுறுத்தியது. எங்கும் அழிவுகள்.

**-ஓ.கே.குணநாதன்-**

சிந்தும் கண்ணீருடன் உடமைகளை வீடு வாசல்களை, உறவுகளைத் தொலைத்து... சனங்கள் எல்லாம் சிதறி உயிர் தெறிக்க ஓடினார்கள். பல்கலைக்கழகம்... கோயில்கள், பாடசாலைகள் அகதி முகாம்களாயின.

மனித உயிர் பாதுகாப்பு வலயமாகின. அவை மனிதக் காட்சிச் சாலை போல

அவர்களும் அருகிலுள்ள பல்கலைக்கழகத்தினுள் ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை. அம்மா, அப்பா, அண்ணா, அவன் திறந்த வெளிச் சிறைச்சாலையில் நிரந்தர அகதிகள்.

ஒவ்வொரு நாளும் செய்தி... புதுப் புதுச் செய்தி எங்கும் சத்தம்- எங்கும் இரத்தம்.

வெண் புறாக்கள் பறந்த வானவெளியில் மனித கொழுப்புடன் கலந்து உருகும் டயரின் கரிய புகை.

அவன்- சந்திரன்

காலையில் கையில் புத்தகங்களுடனும் மாலையில் கிரிக்கெட்டும் என்று திரிய வேண்டியவன். அவனும் இந்த வாழ்வுக்குள் முடங்கிப் போனான்

போராட்டம், விடுதலை என்றாலே என்ன என்று தெரியாத வயது விளையாட்டுப் புத்தி.

அகதிமுகாம் வாழ்க்கையில் அவன்- அவனுடைய குடும்பம்- சனங்கள் பட்ட துன்பங்கள்... கூடிக்கூடி கதைப்பவர்களின் சம்பாசனைகள், போராட்டங்கள் என்ற சிறிய விதையை விதைத்தது. அது அவனுக்கு வேடிக்கையாகவும் இருந்தது. ஓடி ஓடி ரசித்தான். அதில் ஏதோ ஒரு சுகம் இருப்பதாக உணர்ந்தான்.

வழமை போலவே செப்ரெம்பர் 5ம் திகதி பொழுது புலரத் துடித்த நேரம்... கனரக வாகனங்களின் பேரிரைச்சல்கள்...

சனங்கள்திடுக்கிட்டு விழித்தார்கள் அவர்களுடைய விழித்த விழிகள் இமைக்க மறந்து போயின. வாசலிலே யானை தும்பிக்கையைத் தூக்கிய படி பல வாகனங்கள் தொடராக கம்பசைச் சுற்றிவர இலை- குழை உடுப்புக்களுடன்... கையில் சுடுகுழல்கள்... தலையாட்டி பொம்மைகள் இரண்டு மணி நேரம் பேயாட்டம் 158 பேருடன் எல்லாம் ஓய்ந்தன.

எங்கும் ஒப்பாரிக் குரல்கள்... அழுகையின் அலறல்கள். அந்த 158னுள் சந்திரனின் தந்தையும் அண்ணனும்...

வேதனையில் துடித்ததாயை அந்தச் சிறுவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. அவனும் சேர்ந்து அழுதான். அந்த வேதனை அவனின் விழுந்த விதையின் முளையை உண்டு பண்ணிற்று. பல நாட்கள் நகர்ந்தன. அழுகையும், ஒப்பாரியும் மிஞ்சின. கியுமன் ரைட்ஸ் செத்துப் போனது அந்த... காணாமல் போனவர்கள் உயிருடன் சமாதியாக்கப்பட்டதாகச் செய்திகள் மெல்லக் கசிந்தன.

இதுவரை 158 பேர்... நாளை... எனக்கும் இதே கதிதான்.

சந்திரனின் மூளையிலிருந்து இரண்டு இலைகள் விரிந்தன.

சந்தர்ப்பங்கள்- சூழ்நிலைகள்? யுத்தத்தில் சிறுவர்கள் ஈடுபடக்கூடாது என்ற ஒப்பந்தம் கருகிப் போனது.

சித்தாண்டி... சத்துருக்கொண்டான்... புதுக்குடியிருப்பு... நிகழ்வுகள் பேரிடியாக காற்றில் வந்து அவனைப் பயமுறுத்தின.

நாளைக்கும் அவனுக்கும் அதே கதி!

அதற்கு ஒரே வழி... உப்போடையைத் தாண்டி அடுத்த பக்கம் போனால்... அவனுடைய மயிரைக்கூட யாரும் பிடிக்க முடியாது.

உப்போடையை நோக்கி நடந்தவன் நடந்தவன்தான். இத்தனை நேரமும்அவனை விட்டு தூரப் போன அவனுடைய மனதை துரத்திப் பிடித்துதாயின் அணைப்பிலிருந்து மீண்டவன்.

"அம்மா நான் போகப்போறன்..." என்றான் "எங்கே? "களத்திற்கு "களத்திற்கா...!

அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள் அந்தப் பார்வையிலே ஆயிரம் அர்த்தங்கள் புதைந்து கிடந்தன.

அவனுடைய இருண்ட மனதிலே இருக்கின்றன ஒரேஒரு கை விளக்கு அவன். அவனும் போய் விட்டால்...

கண்களில் வடிந்த நீரை சேலைத் தலைப்பால் துடைத்த படி "சாப்பிட்டாவது போவன்..." "சரி" தலையசைத்தான் பத்து வருடங்களின் பின்பு தாயின் கையினால் சாப்பிடப் போகும் ஆசை. அவன் சிமினி விளக்கின் முன்னே அமர்ந்தான் அவன் ஆசையோடுஅவனுடைய வயிற்றைக்கூட கழுவப் பற்றாது ப்ானைக்குள் கிடந்த ஒரு பிடிச் சோற்றை கோப்பைக்குள் போட்டு, அவன் முன்னே வைத்தாள்.

அப்போது யாரோ காய்ந்த சருகில் நடந்து வருவது போல சரக்... சரக் ஒலி.

தொடர்ந்து நாய்கள் இயமனைக் கண்டது போல அவதி அவதியாக அவஸ்தைப்படுகின்றன.

அவன் சோற்றைப் பிசைந்த படி மௌனமாக நின்றான். அவள் மெதுவாக எழுந்து வந்து கிடுகின் இடவினூடாகப் பார்த்தாள். "தம்பி அவங்கள் வந்து விட்டார்கள். பதறியது தாயின் குரல்

கையை உதறிக்கொண்டு கதவின் இடவினூடாகப் பார்த்தான் தெரு நாய்கள்...

தெருநாய்களுடன் சேர்ந்து ஊர் நாய்கள்... அவனால் இனி தப்ப முடியுமா...?

அவன் உயிரை விட.... அவனிடம் இருக்கின்ற இரகசியங்களைக் காப்பாற்றுறது தான் முக்கியம். இராணுவம் அவனைச் சுற்றி விட்டது. இனி அவனால் தப்ப முடியாது. "அம்மா... எனக்கொரு ஆசை செய்வீர்களா...!" என்ன

" நான் உங்கட மடியில கொஞ்சம் படுக்க வேணும்" சிசுவாக அவன் பூமியிலே விழுந்த போது அவனைத் தாலாட்டி... சீராட்டி... அணைத்துப் பாலூட்டிய அதே மடியிலே... இந்த மண்ணில் ஒவ்வொரு உயிர்களும் விதையாகவெழுந்து... என்றோ ஒரு நாள் முளைப்பார்கள் என்ற நம்பிக்கையோடு படுத்துக் கொண்டான்.

" அம்மா இன்னுமொரு ஆசை... "

"என்ன... "

நான் பிறந்தப்போ இந்த மடியில போட்டு பாலூட்டின கையால... இந்தச் சயனட்டை ஊட்டி விடுவீங்களா...!" கருப்பு நூலிலே தொங்கிய வெள்ளை நிற சயனைட் குப்பி அவனுடைய கையிலே...

"மகனே"

அவள் தடுமாறினாள்

"என்னம்மா யோசிக்கிறீர்களா...?"

" கண்கள் கெஞ்சின

மௌனம் இளையோடியது. அம்மா எதிரியின்ட கையால... காட்டிக் கொடுக்கிற நாய்களின்ட கையால நான் சாகொணுமா? வீர மகனப் பெற்ற தாயின்ட கையால சாக விரும்புறன்... ஊட்டி விடுவிங்களா...!"

அவனுடைய பார்வைகள் பாலுக்காக ஏங்கும் குழந்தை தாயிடம் பாலைக் கேட்டு அழுவது போல இருந்தது.

"இதுக்காகத் தானா பத்து வரிசம் கழித்து என்னைத் தேடி வந்தாய்..." நெஞ்சு பதறித் துடித்தது. "அம்மா... ஊட்டி விடுங்கள். அவளுடைய உயிர் வலித்தது. உறுதிப் பூச் செடியில் முளைத்த மொட்டாக அந்த தாயின் கையில் சயனைட். அவனுடைய விழிகள் நிலை குத்தின.

## சுனாமி பகுதிகளில் பெண்கள் கடத்தல்

# தேசிய மனித உரிமை ஆணைக்குழு அச்சம்!

(ராய்ட்டர்)

சுனாமி பாதித்த கடலோரப் பகுதிகளில் பெண்கள், சிறுவர்கள் கடத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதைத் தடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேசிய மனித உரிமை ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுனாமி பேரலைகளால் கடலோரப் பகுதிகள் பெரும் சேதம் அடைந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் தமிழகம், ஆந்திரா, கேரளா மாநிலங்களில் பலியாயினர். ஆயிரக்கணக்கானோர் வீடுகள், உறவினர்களை இழந்து விட்டனர். பெற்றோரை இழந்து சிறுவர், சிறுமியர் பலர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் கணவன், பெற்றோரை இழந்து பெண்கள் பலர் அனாதைகளாக உள்ளனர். அவர்களைக் கடத்தும் மோசடி அதிகரிக்கும் என்று தற்போது தேசிய மனித உரிமை ஆணைக்குழு அச்சம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து தேசிய மனித உரிமை கமிஷன் தலைவர் நீதிபதி ஏ. எஸ். ஆனந்த் நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது: சுனாமி பாதித்துள்ள பகுதிகளில் ஆதரவற்றுள்ள பெண்கள், சிறுவர், சிறுமிகளைக் கொத்திச் செல்ல கழுகுகள் போல் இடைத் தரகர்கள் காத்திருக்கின்றனர். அவர்களைக் கடத்திச் சென்று பணம் சம்பாதிக்கும் நோக்கில் அவர்கள் செயல்படக்கூடும். ஆதரவற்று நடுத்தெருவில் அல்லது முகாம்களில் உள்ள பெண்கள், சிறுவர், சிறுமியர்களைக் காக்க அரசு உடனடியாக ஒரு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.

அரசு தரப்பில் மட்டுமன்றி அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் அவர்களுடைய பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் திட்டங்களை முறைப்படுத்தி செயலாற்ற வேண்டும். வறுமையில் வாடுபவர்களைக் கடத்துவது, ஆதரவற்றோரைக் கடத்துவது போன்ற செயல்கள் முற்றிலும் மனித உரிமையை மீறியது. இவ்வாறு நீதிபதி ஆனந்த் கூறினார்.

இந்தியா வந்துள்ள அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினர்கள் பிரதமர் மன்மோகன்சிங்கை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினர்



# உலக செய்திகள்

## ஒரிசா மாநிலத்தில்

# இலகுரக விமானம் மாயம்

(பாலாசூரி)

ஒரிசா மாநிலத்தில் சோதனைக்காக ஏவப்பட்ட ஆளில்லா விமானம் காணாமல் போய் உள்ளது. இதனை மாநில பொலிசாருடன் சேர்ந்து பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தேடி வருகின்றனர்.

ஒரிசா மாநிலம் பாலாசூர் அருகேயுள்ள பந்திபூரில் ஒருங்கிணைந்த சோதனை தளம் ( ஐ. டி. ஆர். ,) உள்ளது. இங்கிருந்து கடந்த புதன்கிழமை மாலை ஆளில்லாத இலகுரக விமானம் கிளம்பியது.

ஆனால், அதன் பின்னர் இந்த விமானம் என்னவானது என்பது குறித்து தெரியவில்லை. எட்டு அடி நீளம் கொண்ட இந்த விமானம் பைபர் கண்ணாடியால் செய்யப்பட்டது. இவ்விமானத்திற்குள் எரிபொருள் நிரப்பும் டேங்க் மற்றும் சிறிய ரிமோட்கன்ட்ரோல் இன்ஜினும் உள்ளது.

விமானம் காணாமல் போனவுடனேயே அது பற்றிய விவரத்தை பாதுகாப்புத் துறை அதிகாரிகள் பாலாசூர் மற்றும் பாத்ராக் ஆகிய கடலோர மாவட்ட பொலிஸ் எஸ். பி.க்களுக்கு தகவல் கொடுத்தனர். இதையடுத்து அவர்கள் கடலோரங்களில் முகாமிட்டு தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 2003ம் ஆண்டில், இதே போன்ற இலகு ரக ஆளில்லாத விமானம் காணாமல் போனது. பின்பு அந்த விமானம் பாலியால் கடற்கரைப் பகுதியில் விழுந்து கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

# இந்து சமுத்திர பிராந்தியத்தில் சுனாமி முன் எச்சரிக்கை மையம்

(ராய்ட்டர்)

சுனாமி அனர்த்தங்கள் தொடர்பான முன் எச்சரிக்கையையொன்றை நிறுவுவதற்கு ஜக்கியநாடுகள் அமைப்பு தீர்மானித்துள்ளது. 2006ம் ஆண்டு யூன்மாதமளவில் இந்து சமுத்திரப் பரப்பில் இந்த முன் எச்சரிக்கை மையம் நிறுவப்படவுள்ளது. இதன் பின்னர் உலகம் முழுவதும் இந்த முன்னெச்சரிக்கை மையங்கள் உருவாக்கப்படவுள்ளன மொறிசியஸ் தீவில் நடைபெற்ற சிறிய தீவுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் விசேட மாநாட்டில் கலந்து கொண்ட தேசிய ஜக்கிய நாடுகள் அமைப்பின் கல்வி, மற்றும் விஞ்ஞானமாகியவற்றின் பணிப்பாளர் நாயகம் கொயூசிரே மஸ்சூறா இதனைத் தெரிவித்துள்ளார்.

சுமார் 30 மில்லியன் அமெரிக்கா டொலர் செலவிலுள்ள முன்னெச்சரிக்கை வெற்றிடங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன செயற்திட்டத்துக்கு உதவி வழங்கும் நாடுகள் பூரண ஆதரவை தெரிவித்துள்ளன.

சுனாமி பேரலைகளின் காரணமாக ஆசியாவில் ஒருலட்சத்து ஐம்பதாயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு சர்வதேச நாடுகள் உதவி வழங்கினாலும் பாதிக்கப்பட்ட நாடுகள் தங்களால் இயன்ற முன்னெச்சரிக்கை செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டுமென மஸ்சூறா வலியுறுத்தியுள்ளார். பாதிக்கப்பட்ட நாடுகள் தங்களுடைய நிதிகளைப் பயன்படத்தி உளளூரில் முன்னெச்சரிக்கைக் திட்டமொன்றை வலியுத்த வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

## பெப்ரவரி மாதம்

# சார்க் உச்சிமாநாடு

(ராய்ட்டர்)

பின்போடப்பட்ட சார்க் உச்சிமாநாடு அடுத்த மாதம் வங்களாதேசத்தில் நடைபெறலாம் எனத் தெரிவிக்கப்படகின்றது. இந்த மாநாடு பெப்ரவரி 6ம்,7ம் திகதிகளில் டாக்காவில் நடைபெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 9ம் திகதி தொடக்கம் 11ம் திகதி வரை நடைபெறவிருந்தது.

பூகம்ப பேரலைகளில் ஏற்படுத்திய பேரழிவை அடுத்து காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது. மாநாடு நடைபெறும் திகதியை சார்க் செயலகம் அறிவிக்க வேண்டும் ஆனால் இந்திய வெளிநாட்டு அரசுகள் அமைச்சர் வெளிநாடுகளின் தலைவர்களுடனும், வெளிநாட்டு தூரகங்களூடாகவும் கோரியிருக்கின்றார். புதிய திகதிகள் குறித்து இணக்கம் காணுவது என இந்தியப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு

# கனடா 600 கோடி நிதி உதவி

(டொரன்டோ)

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவ, கனடா நாட்டு மக்கள் மட்டும் ரூ. 600 கோடியை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

சுனாமியால் பாதித்த தெற்காசிய நாடுகளுக்கு உலகம் முழுவதும் நன்கொடைகள் திரட்டி வழங்கப்படுகிறது. அதில், கனடா நாட்டு மக்கள் தாராளமாக நிதியை வாரி வழங்கியுள்ளனர். அவர்கள் தந்த நன்கொடை ரூ. 600 கோடி.

கனடா நாட்டு மக்களில் பெரும்பாலானோர் நன்கொடை வழங்கியுள்ளனர். பள்ளிச் சிறுவர்கள் கூட பெற்றோர் தங்களுடைய செலவுக்கு தந்த பணத்தையும், சேமிப்பு பணத்தையும் நன்கொடையாக தந்து அசத்தியுள்ளனர். டொரன்டோவைச் சேர்ந்த தம்பதி மட்டும், ரூ. 22 கோடியே 50 லட்சம் தந்துள்ளனர்.

## தாய்லாந்து வழமைக்கு திரும்புகிறது

# சேதமடைந்த வீடுகள் திருத்தப்படுகின்றது

(பான் நாம்கெம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றான தாய்லாந்தில், மக்கள் பயம் விலகி கொஞ்சம் கொஞ்சமாக தங்கள் இருப்பிடத்திற்கு திரும்ப ஆரம்பித்துள்ளனர். இடிந்து போன வீடுகளை மீண்டும் சீரமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். தாய்லாந்தின் காவோலாக் கடற்கரைப் பகுதி தான் சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்டன. இக்கடற்கரையின் வடக்குப்பகுதியான பான் நாம்கெம் கிராமத்தில் பெரிய அளவில் உயிரிழப்புகள் நிகழ்ந்தன. வீடுகளும் சேதமடைந்தன. இந்நிலையில், சுனாமி பயத்திலிருந்து மக்கள் படிப்படியாக மீண்டு, கிராமத்திற்கு திரும்பி தங்களது வீடுகளை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இக்கிராமத்தைச் சேர்ந்த சூரிவான்மான்காங் என்ற 21 வயது மாணவிக்கு பொதுவாக பேய்கள் குறித்த பயம் ஏற்கனவே உண்டு. தற்போது நிவாரண முகாமில் தங்கியிருக்கும் இந்தப் பெண், சுனாமி பேரலை வந்தபோது தென்னை மரம் மீது அரைமணி நேரத்திற்கும் மேலாக தொங்கி உயிர் தப்பியுள்ளார்.

இவளது வீடு சுனாமியால் சிதைந்து விட்டது. இவளது கிராமத்தில் சுனாமிக்கு நிறைய பேர் பலியாகி விட்ட நிலையில், அக்கிராமத்தில் பேய்கள் உலாவும் என்ற பேச்சு எழுந்துள்ளது. ஆனாலும் சூரிவான் தனது கிராமத்திற்கு மீண்டும் திரும்ப விரும்புவதாகவே தெரிவித்தாள். இதுகுறித்து அவள் கூறுகையில், "சுனாமியால் இறந்த வர்களின் பிணங்களை நிறைய பார்த்தேன். பேய் குறித்த பயம் எனக்கு ஏற்கனவே இருந்தது.

ஆனால், இனிமேல் அதுபற்றியெல்லாம் பயப்படமாட்டேன். நான் எனது கிராமத்திற்கு திரும்ப வேண்டுமென்றே விரும்புகின்றேன். எங்களுக்கு அளிக்கும் நிவாரணத் தொகையை வாங்கிவிட்டு திரும்புவேன். இதில் அதிகம் செல வழிக்கப் போவதில்லை. எனது வீட் டை மீண்டும் புதுப்பிக்கப் போகின்றேன்.

காரணம் நான் அங்கு தான் பிறந்தேன்,"என்று தெரிவித்தார். தாய்லாந்தில் சுனாமியால் பாதிப்புக்குள்ளான பெரும்பாலான மக்கள், தங்கள் சொந்த கிராமங்களுக்கே மீண்டும் குடியேற ஆரம்பித்துள்ளனர்.

# சமாதானத்தை ஏற்படுத்த போவதாக சூடான் ஜனாதிபதி தெரிவிப்பு

(டாக்பூர்)

சூடானில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த போவதாக அந்நாட்டின் ஜனாதிபதி உமான் அல் வெசீவிர தெரிவித்துள்ளார். வன்முறைகள் அதிகளவில் இடம் பெற்ற டாபூர் பகுதிகளிலும் அமைதியை நிலைநாட்ட போவதாக அவர் குறிப்பிட்டார். காட்டுனில் இடம் பெற்ற ஆளும் கட்சிக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த தகவல்கள் மகிழ்ச்சியளிப்பதாக ஆளும் கட்சி ஆளுனர்கள் தெரிவித்துள்ளார். டாபூரில் இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தி இயல்பு வாழ்வை ஏற்படத்துவதே தமது பிரதான குறிக்கோள் என குறிப்பிட்டார்.

சூடான் அரசாங்கம் பிரிவினவாத இயக்கமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைச்சாத்திட்ட சமாதான ஒப்பந்தம் நாட்டின் சுவிட்சத்துக்கு வழிவகுத்துள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளார். சூடானில் 21 வருடமாக இடம் பெற்றுவந்த உள்நாட்டு யுத்தம் காரணமாக சுமார் 20 இலட்சம் மக்களும், இராணுவத்தினரும் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 40 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

### பலஸ்தீன போராளிகள் தாக்குதல்

### ஐந்து இஸ்ரேலியர்கள் பலி

இஸ்ரேலில் நேற்று இடம் பெற்ற தாக்குதல் ஒன்றில் 5 இஸ்ரேலியர்கள் பலியாகியுள்ளனர். பலஸ்தீனப் போராளிகள் மூவர் நடத்திய தற்கொலைத் தாக்குதலிலே இவர்கள் கொல்லப்பட்டனர். இதேவேளை சம்பவத்தில் மேலும் பல இஸ்ரேலியர்கள் காயமடைந்துள்ளனர். இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான சோதனைச் சாவடியிலே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இந்த சம்பவத்துக்கு பலஸ்தீனத்தின் 3 போராளிக் குழுக்கள் உரிமை கோரியுள்ளன.

## டுபாயில் வர்த்தக திருவிழா

# 200ற்கும் மேற்பட்ட இளைஞர்கள்

(டுபாய்)

டுபாயில் நேற்று முன்தினம் வர்த்தக திருவிழாதொடங்கியது. இதில் 200க்கும் அதிகமான கலைஞர்கள் கலந்து கொண்டு பார்வையாளர்களை மகிழ்விக்க உள்ளனர். டுபாயில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் இரண்டாவது வாரத்தில் வர்த்தக திருவிழா தொடங்குகிறது. நேற்று முன்தினம் தொடங்கிய வர்த்தக விழாவில் உலகம் முழுவதும் இருந்து ஏராளமான பார்வையாளர்கள் கலந்து கொண்டுள்ளனர். பல்வேறு நாடுகளை சேர்ந்த இசை மற்றும் திரையுலக கலைஞர்கள் இவ்விழாவில் பங்கேற்று கலை நிகழ்ச்சிகளை நடத்த உள்ளனர். 79 நாட்கள் நடக்கும் இவ்விழாவில் ராஜஸ்தான், மகாராஷ்டிரா, பஞ்சாப், கர்நாடகா மாநிலங்களை சேர்ந்த கலைஞர்கள் பங்கேற்று தங்கள் திறனை வெளிப்படுத்த உள்ளனர்.

## சூரியனின் கதிரியக்க சக்தி

# குறைவடைந்து வருகிறது

(டுபாய்)

சூரியனில் இருந்து வெளிக்கிளம்பும் கதிரியக்க சக்தியில் 22 வீதம் வீச்சுக்கள் குறை ஏற்பட்டிருப்பதாக இஸ்ரேலிய விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 50 வருடங்களில் இந்த சக்தி குறைவு ஏற்பட்டிருப்பதாக விஞ்ஞானியான ஸ்றெஸ்லில் கெரி கூறியுள்ளார். உலகில் உள்ள சூரிய சக்தியில் சம்மந்தப்பட்ட பல இயக்கங்கள் செயலிழந்து போகும் எனவும் அவர் தெரிவிக்கின்றார்.


உலகில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு சூழல் மாசடைதல் சம்பவங்களின் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கும் அவரின் கருத்தை பல விஞ்ஞானிகள் எதிர்த்தாலும் தற்சமயம் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

# ஆஸி.ஓபன் டெனிஸ் தொடரில் ரோஜர் பெடர் டேவன்போர்ட் முதல் நிலை



அவுஸ்ரேலியன் ஓபன் டெனிஸ் தொடரில் வீரர், வீராங்கனைகளுக்கான தகுதி நிலைப்பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. ஆண்கள் பிரிவில் ரோஜர் பெடரரும், பெண்கள் பிரிவில் டேவன் போர்ட்டும் முதல் நிலை பெற்றுள்ளனர். கிராண்ட் ஸ்லாம் அந்த ஸ்து பெற்ற அவுஸ்ரேலியன் ஓபன் டெனிஸ் தொடர் வரும் 17இல் அவுஸ்ரேலியாவில் தொடங்க உள்ளது. இதற்கான வீரர், வீராங்கனைகளின் தகுதி நிலைப்பட்டியல் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

ஆண்கள் பிரிவில் நடப்பு



சம்பியனான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் முதல் இடத்தை பெற்றுள்ளார். இவர் கடந்த ஆண்டில் மட்டும் 3 கிராண்ட் ஸ்லாம் பட்டங்கள் உட்பட 11 போட்டிகளில் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார்.

அமெரிக்காவின் ஆண்டி ரோடிக் இரண்டாம் இடம் பெற்றுள்ளார். அமெரிக்காவின் ஆந்த்ரே அகாசி எட்டாவது இடம் பெற்றுள்ளார். 34 வயதான இவர் ஆண்கள் பிரிவில் பங்கேற்கும் மூத்த வீரராக உள்ளார். பெண்கள் பிரிவில் அமெரிக்காவின் டேவன் போர்ட் முதல் இடத்தை பிடித்துள்ளார். பிரான்சின்



அமெலிமவுரிஸ்மோ இரண்டாவது இடம் பெற்றுள்ளார். இதற்கடுத்து ரஷ்ய வீராங்கனைகளின் ஆதிக் கமே முழுமையாக காணப்படுகிறது.


இதில் பிரெஞ்ச் ஓபன் சாம்பியன் அனஸ்டாசியா மிஸ்கினா மூன்றாவது இடமும், விம்பிள்டன் சாம்பியன் மரியாஷர போவா நான்காவது இடமும் பெற்றுள்ளனர். அமெரிக்காவின் செரினா 7வது இடமும், வீனஸ் வில்லியம்ஸ் 8வது இடமும் பெற்றுள்ளனர்.

அவுஸ்ரேலியன் ஓபன் தொடர் தொடங்க இன்னும் 3 நாட்கள் மட்டுமே உள்ள நிலையில் முன்னணி வீரர்களின் காயம் போட்டியின் விறுவிறுப்பை பாதிப்பதாக உள்ளது. பெண்கள் பிரிவில் ஹெனின், கிளைஸ்டர்ஸ், கேப்ரியாட்டி போன்ற முன்னணி வீராங்கனைகள் காயம் காரணமாக ஏற்கனவே போட்டியி லிருந்து விலகிவிட்டனர்.

இந்நிலையில் தற் போது அமெரிக்காவின் ஆந்த்ரே அகாசி, இந்தியாவின் லியாண்டர் பயஸ் ஆகியோர் பங்கேற்பதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. சிட்னி ஓபன் போட்டியில் செர்பியாவின் நீனட் ஜிமோன்ஜிக்குடன் ஜோடி சேர்ந்து விளையாடி வருகிறார் நமது பயஸ்.

நேற்று முன்தினம் நடந்த போட்டியின் போது காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பயஸ் உடனடியாக "வீல்சேர்" மூலம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார்.



சிட்னி சர்வதேச டெனிஸ் பெண்கள் பிரிவில், ரஷ்யாவின் எலினா டெமன்டிவா 6-4,1-6,6-1 என்ற செட்களில்சுவிட்சர்லாந்தின் பேட் டிஸ்கினிட்டை வீழ்த்தினார். (அடுத்த படம்) ஆண்கள் பிரிவில் செக் குடியரசு வீரர் இவோ மினார் 2-6, 7-6, 6-4 என்ற செட்களில் ரோமேனியாவின் அன்ட்ரி பாவெலை தோற்கடித்தார். லண்டனில் நடந்த பர்ஸ்ட் லெக்லீக் கால்பந்து போட்டியில், செல்சியா வீரர் வில்லியம் பலாஸ்(வலது),மான்செஸ்டர் யுனைடெட் வீரர் லூயிஸ் சஹா இருவரும் பந்தை தலையால் முட்டிச் செல்ல முற்படுகின்றனர்.

# வீரர்க்கு வியர்வை வாசனை திரவியம் ஒட்டமே வெற்றியின் இரகசியம்

## - கபில்தேவ் அறிவுரை -

ஒவ்வொருவரும் ஓட வேண்டும். எந்த அளவுக்கு வியர்வை சிந்த ஓடுகிறோமோ அந்த அளவுக்கு ஆரோக்கியமாக இருக்கலாம். வீரர்களுக்கு வியர்வைதான் வாசனைத் திரவியம். ஓட்டமே வெற்றியின் ரகசியம் என்கிறார் நமது கிரிக்கெட் ஜாம்பவான் கபில்தேவ்.

மும்பையில் வரும் 16இல் மருதன் ஓட்டம் நடக்கின்றது. இதற்கான விசேஷ தூதர்களாக கபில்தேவ், அஞ்சு பாபி ஜோர்ஜ், இங்கிலாந்தின் ஸ்டிவ் ஓவட், லின்போர்ட் கிறிஸ்டி நியமிக்கப்பட்டுள்ளனர்.



இது தொடர்பாக நேற்று முன்தினம் பேட்டி அளித்த கபில்தேவ், மருதன் ஓட்டத்தின் அவசியத்தை எடுத்துக் கூறினார்.

தவிர மத்திய அரசு விளையாட்டு தினம் ஒன்றை அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# சுனாமி அலையின் மூலம் சிறிலங்கா அரசுக்கு சுவீப்அதிஷ்டம்

கடந்த மாதம் இடம் பெற்ற சுனாமி கடலலைத் தாக்கத்தினால் இலங்கையின் கரையோரக் கிராமங்கள் அழிக்கப்பட்டு 32 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் உயிரிழந்ததுடன் பல கோடி ரூபா பெறுமதியான சொத்தழிவுகளும் ஏற்பட்டன.

இருப்பினும் சிறிலங்கா அரசுக்கு தற்போது கிடைத்துவரும் சர்வதேச உதவிகளும், அனுதாபங்களும் இலங்கை இருந்த நெருக்கடியிலிருந்து மீண்டும் அழிவுகளை விடவும் பன்மடங்கு அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பதாக மக்கள் கதைத்துக் கொண்டிருக்கின்றனர். இதனால் சுனாமி இலங்கைக்கு சுவீப் அடித்தமாதிரி எனக் கூறுகின்றனர்.

மேலும் இலங்கை பெற்றுள்ள கடன்களை ரத்துச் செய்யவும், வட்டியை இரத்துச் செய்யவும், எனப் பல உலக செல்வந்த நாடுகளும் தீர்மானமெடுத்துள்ளதுடன் ஐ.நா. சபை, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக சுகாதார நிறுவனம், உலக உணவு ஸ்தாபனம், கைத் தொழில் நாடுகளின் அமைப்பு போன்ற அமைப்புக்களின் மூலமும் மற்றும் தனிப்பட்ட நிறுவனங்கள், அமைப்புக்கள், செல்வந்தர்கள் மூலமும் இலங்கைக்குப் பல கோடிக்கணக்கான நிதியுதவி மற்றும் நன்கொடைகளும் குவிந்த வண்ணமுள்ளன.

இவற்றை சரியாகப் பயன்படுத்தி நாட்டினை அபிவிருத்தி செய்வதுதான் பாக்கி. இருப்பினும் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களும், அனைத்து பிரதேசமும், பயனடைய இவ்வுதவிகள் பயன்படுத்தப்பட வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# மருத்துவப் பொருட்கள் உடன் தேவை

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு மருத்துவ உதவிகள் அவசரமாகத் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அனர்த்தத்தினால் பாதிப்படைந்தவர்களை விடவும் நோய் தொற்றுக்கள் ஏற்பட்டு வருவதாகவும், குறிப்பாக சிறுவர்களுக்கிடையே இந்தப் பாதிப்பு அதிகம்க உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே மருத்துவ உதவிகளைக் கொண்டு வருவோர்கள் மருந்துப் பொருட்கள், மற்றும் தொற்று நோய்கள் அகற்றும் மருந்துகளைக் கொண்டு வருமாறும் தெரிவிக்கப்படுகின்றது.

# அனர்த்த நிவாரணப் பணிகளில் அதிகாரிகள் மோசடி

ஆழிப் பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளில் ஈடுபடும் அதிகாரிகள் மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சரியான முறையில் பொருட்களை பகிரப்படாமல் எடுத்துச் செல்ல ப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு எடுத்துச் செல்லப்படும் பொருட்கள் சில வியாபார நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக இவ்வாறான முறைகேடுகளால் அரச அதிகாரிகள் ஈடுபடுவார்களானால் பொது மக்களே அதிகம் பாதிக்கப்பட வேண்டிவரும். எனவே நிவாரணப் பகிர்வு தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனங் கொ ண்டு சரியான முறையில் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென ஈழநாதமூடாக வேண்டுகோள் விடுகின்றோம்.

பாதிப்புற்ற மக்கள்

## மனிதாபிமானப் பணியில் பாரபட்சம் வேண்டாம்

தென்னிலங்கைக்கு வரும் வெளிநாட்டு இராச தந்திரிகள், அதிகாரிகள் வடக்குக் கிழக்கிற்கும் வந்து பாதிப்புற்ற பகுதிகளைப் பார்வையிட வேண்டும். அண்மைக் காலமாக வரும் பிரதிநிதிகளில் ஒரு சிலர் கிழக்கிற்கு வந்து கண்துடைப்பிற்காகப் பார்வையிட்டுச் செல்கின்றனர். ஏனைய எவரும் வரவில்லை. அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தை முற்றாகப் புறக்கணித்து விட்டனரென மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

எம். சுபைா, சாய்ந்தமருது




இயற்கையின் கோரத்தாண்டவத்தால் அழிந்து போயுள்ள எமது துயரத்தில் இன்னலுற்றிருக்கும் எமது உறவுகளின் குரலிது.

எம்முறவுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவசர மனிதாபிமானப் பணிகள், அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் என்பவற்றை தாங்கி தினமும் வெளிவருகின்றது.

நீங்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள், உடனடித் தேவைகள் என்பவற்றை எமக்குத் தெரியப்படுத்தவும். மேலும் நீங்கள் எமக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பும் தகவல்கள், தெரிவிக்க விரும்பும் செய்திகள் என்பவற்றையும் எமக்கு அறியத்தரலாம் முடிந்தவரை அவற்றை வெளிக்கொணர்ந்து தீர்வு காண முயற்சிப்போம்

# சுனாமி பேரலை அவதானிப்பு நிலையம் வேண்டும்

சுனாமி பேரழிவிலிருந்து மக்களைக் காப்பாற்றும் பொருட்டு கரையோரப் பிரதேசங்களில் அவதானிப்பு மையங்கள் நிறுவப்பட வேண்டும். சுனாமி பேரழிவின் தாக்கத்தால் மக்களுக்கு ஏற்பட்ட பீதி இன்னும் மாறவில்லை.

இந்த நிலையில் அவதானிப்புமையங்களை நிறுவி அது தொடர்பிலான பயிற்சி பெற்றவர்களை நியமித்து மக்களுக்கு முன் கூட்டியே அறிவிப்பதன் மூலம் உயிரழிவுகளை தவிர்க்க முடியும் எனஆலோசனை மக்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே இயன்றவரை இதனைச் செயற்படுத்த அரசு அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வருவது அவசியம்.

# சுனாமி அலை குறித்து அவதானமாக இருக்கவும்

சுனாமி பீதி குறித்து மக்கள் விழிப்பாக இருக்கும் அதேவேளை அது தொடர்பாகப் பரவும் வதந்திகள் குறித்து மிக அவதானமாகச் செயற்படுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது. சில இடங்களில் திடீரென கிளப்பப்படும். வதந்திகள் காரணமாக மக்கள் மரணபீதி கொண்டு ஓடுகின்றனர். இதன் பின்பு சில திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டி பொருட்களை சுருட்டிக் கொண்டு ஓடுவதாகத் தெரிய வந்துள்ளது.

எனவே மிக விழிப்புடன் இருந்து செயற்படுமாறு வேண்டுகின்றோம் என புத்திஜீவிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## சிந்தனைக்கு



விடுதலைப்புலிகளின் மனோ திடத்தையும் உறுதியையும் அழித்து விட சிங்கள இராணுவத்தால் முடியாது. மகத்தான தார்மீக வலிமையும், தியாக உணர்வும்,உன்னத இலட்சியப் பற்றும் எங்களுக்குண்டு.

தமிழீழ தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்

ஈழநாதம்
கிழக்குப்பதிப்பு EEZHANATHAM

பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
மின்னஞ்சல் :- batti@eezhanatham.com
தொலைபேசி :- 065-2226110

15-01-2005

## மறத் தமிழன் வரலாறு இனியும் கறை படியாது.

இயற்கையாக நடந்த இந்தப் பேரனர்த்தத்தினால் சிக்குண்டிருக்கும் மக்களுக்கான மறு வாழ்வுப் பணிகள் சகல கங்களிலும் பிரதேச வேறுபாடுகள் இன்றி முன்னெடுக்கப்படும் அதே வேளை சுனாமி பேரனர்த்தம், போர் அனர்த்தம் மற்றும் தமிழ் மக்களின் அரசியல் ரீதியான உணர்வுகளுக்கு ஆப்பு வைத்து விடக்கூடாது. சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் விடயத்தில் இன்றைய ஆளும் தரப்பு இழுத்தடித்து செயற்பட்டு வந்த நிலையில் சர்வதேச சமூகம் அரச தரப்பு மீது கடுமையான அழுத்தங்களை பிரயோகித்தது. கண்டனங்களையும் தெரிவித்து வந்தனர். இனவாத சக்திகளின் கட்டுக்குள் சிக்குண்டு நிற்காது சமாதானப் பேச்சுக்களை சந்திரிகா அம்மணி ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தனர்.

ஆனால் அந்த அழுத்தங்கள் வேண்டுகைகள் எல்லாம் கூறிய நிலையில் தான் ஆழிப் பேரலை அனர்த்தம் நிகழ்ந்தது. மிகப் பெரியதொரு அழிவை இலங்கை தேசம் எதிர் கொண்டுள்ளது.

உயிர்களையும், உடமைகளையும், பொது மக்கள் இழந்திருக்கும் அதே வேளை சிறிலங்கா அரசும் மிகப் பெரியதொரு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இராணுவக் கடற்படைத் தளங்கள் இராணுவ முகாம்கள் எல்லாம் ஆழிப் பேரலையால் அள்ளுண்டு போன நிலையில் மிகப் பெரியதொரு இராணுவப் பின்னடைவு அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

அதே வேளை சிறிலங்கா அரசுக்கு மிகப் பெரியதொரு வருவாயை ஈட்டிக் கொடுக்க உல்லாச பிரயாணத்துறை வீழ்ச்சி கண்டுள்ளது. இலங்கைத் தீவுக்குப் படையெடுத்து இயற்கை அழகுகளை ரசித்து மகிழ்ந்து கடலில் குளித்து குதூகலித்த சுற்றுலாப் பயணிகள் இனி இந்தத் தீவுக்குப் போகமுடியாது. உயிரா பத்து மிக்க பிரதேசமாக மாறி விட்டதாகக் கருதுகின்றனர்.

மீன் பிடித்துறையும் வீழ்ச்சியடைந்து விட்டது மீன் பிடி வள்ளம் சாதனங்களைத் திருத்தி தொழிலை ஆரம்பித்தாலும் அருவருப்பின்றி மீன்களைச் சமைத்து உண்பதற்கு மக்கள் தயாரில்லை. பிணங்களை உண்டிருக்கலாம் பல தொற்று நோய்கள் ஏற்படலாம் என சமூகம் சிந்திக்கின்றது. தகரங்களால் அடைக்கப்பட்ட மீன்கள், கருவாடுகளில் தான் மக்கள் நாட்டம் கொள்கின்றனர். இவ்வாறு மிகப் பெரும் வருமானத்துறைகளும் வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் அவற்றை மீள் கட்டுமானம் செய்து வருமானத்தை ஈட்டுவதென்பது கடினமானகாரியம். எப்போது சர்வதேச சமூகம் சமாதான முயற்சிகளில் அவசியமற்று தலையிடு கிறது என சாட்டையடி கொடுத்தாரோ அம்மணி இப்போது அழுது புலம்பி மடிப்பிச்சை கேட்கும் அளவிற்கு ஆழிப் பேரலை அனர்த்தம் கொள்கைகளை மாற்றி விட்டது. இன்று ஏற்பட்டிருக்கும் இந்தப் பேரழிவிலிருந்து தமிழ் பேசும் சமூகமும் தமது தாயகத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான பணியில் கைகோர்த்து நிற்க வேண்டும் மறு புறம் இவ்வாறான இராட்சத அலையின் பீதி இன்னும் இன்னும் மக்கள் மனதில் இருந்து மறையாது இருப்பது கவலைக்குரியது. எதிர்பாராத விதமாக நடந்த இந்த இயற்கை அனர்த்தத்தை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தால் மட்டும் பயனில்லை. அடுத்த தலைமுறையைச் சிந்திப்போம் எஞ்சியிருக்கும் மக்களின் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அவர்கள் சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு சூழலை உருவாக்க வேண்டும்.

கடந்த இருபது வருட போராட்டத்தின் போது தமிழினம் விடுதலைக்காகப் போராடிய அந்த உணர்வும் வேகமும் சுனாமியால் திசை மாறிச் சென்று விடக்கூடாது. பெரு வெள்ளம் சூறாவளி மண் சரிவு, எரிமலை வெடிப்பு, சுனாமி பேரழிவு இவை இயற்கை அனர்த்தங்கள்.

இதற்காக எமது உணர்வுகளையும், உரிமைகளையும் குழி தோண்டிப் புதைக்கவோ, விலை பேசி விற்கவோ தமிழினம் தயாரில்லை. வீரம் செறிந்தவர்கள் தமிழர்கள் கடற்கோள் வந்து கனம் பண்ணிச் சென்றாலும் மறத் தமிழர் வரலாற்றில் கறை படியாது.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விடுதலை புலிகள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றனர்.

### பிரதியமைச்சர் தஸாநாயக்க

(காத்தானகுடி நிருபா)

விடுதலைப்புலிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதிலும், மீட்புப் பணியிலும் அரசின் நடவடிக்கைக்கு ஒத்துழைத்தும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதையிட்டு அரசாங்கத்தின் சார்பாக நன்றியினையும், பாராட்டையும் பிரதியமைச்சர் தஸாநாயக்கா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளையும் அவலங்களையும் அறிவதற்காக இரண்டாவது தடவையாக வருகை தந்த புனர்வாழ்வு தேசிய நல்லிணக்க பிரதியமைச்சர் தாமு தஸாநாயக்கா மட்டக்களப்புக் கச்சேரியில் பதில் அரசாங்க அதிபர் சி.புண்ணியமூர்த்தி தலைமையில் இடம் பெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் தமிழ்க் தேசியக் கூட்டமைப்பு மட்டு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான யோசப் பரராசசிங்கம், செல்வி. தங்கேஸ்வரி, கனகசபை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.பஷீர் சேகுதாவூத், அரச திணைக்கள கூட்டுத் தாபன தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்தும் உரையாற்றிய பிரதியமைச்சர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி பின்னர் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வோம். இங்கு அவசியமாகத் தேவைப்படுகின்ற கனரக வாகனங்கள் தேவை பற்றி ஊடகங்கள் ஊடாக விளம்பரப்படுத்தி அனைத்து ரக கனகர வாகனங்களையும் பெற்றுத் தருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதியமைச்சர் தஸாநாயக்கா கனகசபை எம்.பி.யின் அழைப்பின் பேரில் பாதிப்புக்குள்ளான இடங்களான குருக்கள்மடம், செட்டிபாளையம், மாங்காடு, தேற்றாத்தீவு, களுவாஞ்சிகுடி ஆகிய பிரதேசங்களையும் பார்வையிட்டதுடன் பாரிய தேசத்துக்குள்ளான ஓந்தாச்சிமடம், கோட்டைக் கல்லாறு, பெரிய கல்லாறு பாலத்தையும் பார்வையிட்டார்.

## காத்தான்குடி பஸ் டிப்போவுக்கு அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா விஜயம்

(காத்தான்குடி நிருபர்)

காத்தான்குடி நியூ ஈஸ்டன் பஸ் டிப்போவுக்கு போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா நேற்று முன் தினம் ஹிஸ்புல்லாவின் அழைப்பின் பேரில் விஜயம் செய்தார்.

தரை மட்டமாக்கப்பட்ட டிப்போவினை பார்வையிட்ட அமைச்சர் புதிய டிப்போவினை வழமை போன்று இயங்குவதற்கான சகல உதவிகளையும் செய்யும் முன்னாள் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவிடம் கையளித்தார்.

அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா ஒல்லிக்குளம், சிகரம், பாலமுனை ஆகிய பிரதேசங்களையும் பார்வையிட்ட அமைச்சர் மட்டக்களப்பு டிப்போவுக்கும் விஜயம் செய்து டிப்போவின் குறைகளைக் கேட்டறிந்தார். அமைச்சருடன் முன்னாள் பிரதியமைச்சரும், விமான நிலையத் தலைவருமான ஹிஸ்புல்லாஹ், சம்மேளனப் பிரதித் தலைவர் ஏ.எல் அப்துல் ஜவால், முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.கமர்தீன் சாலை முகாமையாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## இடை நிறுத்தப்பட்ட பஸ் சாரதிகளுக்கு நேர்முகப் பரீட்சை

(காத்தான்குடி நிருபர்)

நியூ ஈஸ்டன் பஸ் கம்பனியின் கீழ் செயல்படும் 15 டிப்போக்களிலும் சாரதியாகக் கடமையாற்றி இடை நிறுத்தப்பட்ட சகல சாரதிகளுக்குமான நேர்முகப் பரீட்சை இம் மாதம் 19ம் திகதி இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை நாரஹேன்பிட்டி தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

இப் பரீட்சைக்கான கடிதம் சகல பரீட்சாத்திகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. கடிதம் கிடைக்காத பரீட்சாத்திகளும் தவறாது இந்நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு முகாமைத்துவப் பணிப்பாளர் ர.கமர்தீன் சகல பரீட்சாத்திகளையும் கேட்டுள்ளார்.

## மட் மாவட்டத்தில் இம்முறை தைப்பொங்கல் சோபிக்கவில்லை.

### சோகமே உருவாக இந்து ஆலயங்களில் விசேட பூசை

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை தைப் பொங்கல் சோபிக்கவில்லை. அதிகமான மக்கள் வெள்ளை ஆடைகளுடன் சோகமே உருவாக இந்து ஆலயங்களில் விசேட பூசையில் கலந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் பட்டுப்பாட்டுப் பிரதேசமான கொக்கட்டிச்சோலை தான்தோன்றீ ஸ்வரர் ஆலயத்திலும், மட்டக்களப் பில் ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயம், மாமாங்கேஸ்வர பிள்ளையார் ஆலயம், வீரகத்திப் பிள்ளையார் ஆலயம், சித்தாண்டி கதிர்வேலாயுத சுவாமி முருகன் ஆலயம் ஆகியவற்றில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றதுடன் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக் காகவும், அமைதி சமாதானம் வேண் டியும், பாதிக்கப்பட்ட மக்கள் சகல வளமும் பெற்று நிம்மதியுடன் வாழவும் விசேட பிரார்த்தனையில் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அதிகமான மக்கள் வீடு வாசல்கள், உற்றார் உறவினர்களை இழந்த நிலையில் அகதி முகாம்களில் முடங்கிக் கிடக்கும் மக்களை பொங்கல் பானை வைத்து பொங்கும் நிகழ்வுகள் அதிகமாக இடம் பெறாத நிலையில் வீடுகளில் பாதிக்கப்படாத மக்களே பொங்கல் திருநாளை அனுஷ்டித்தனர். புத்தாடை இல்லாத பொங்கலாக எவ்வித களியாட்டங்கள், வான வேடிக்கைகள் இல்லாத அமைதியான சோகமான பொங்கலாகவே மட்டு மாவட்ட மக்கள் தைப்பொங்கல் திருநாளை அனுஷ்டித்தனர்.

## கல்முனையில் தஞ்சமடைந்துள்ளோரை மீளக் குடியமர்த்த நடவடிக்கை

(பாண்டிருப்பு நிருபர்)

கடல் கோள் அனர்த்தத்தினால் கல்முனைப் பிரதேசத்தில் அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மக்களை மீளக் குடியேற்றுவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வீடமைப்பு அதிகார சபையின் மற்றும் அமைச்சர் பேரியல் அஷ்ரப் ஆகியோரிடையே கலந்துரையாடலும் நடைபெற்று வருகின்றன. கல்முனையிலுள்ள கரவாகு வெட்டை, மேட்டு வெட்டை காணிகளிலே அகதிமுகாம்களில் தஞ்சமடைந்து வீடுவாசல்களை இழந்துள்ள தமிழ் முஸ்லிம் மக்களை மீளக் குடியேற்றுவது தொடர்பாக ஆராயப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் 20ம், 25ம் திகதிகளில் பாடசாலைகள் ஆரம்பமாகவிருப்பதனால் இம் மக்களை தற்காலிகமாக இங்குள்ள தனியார் காணிகளிலும் அரச காணிகளிலும் தற்காலிகக் கொட்டகைகள் அமைத்து அவர்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கல்முனைப் பிரதேச செயலாளர் பிரிவில் இடம் பெயர்ந்து அகதிகளாக வசிக்கின்ற பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, கல்முனை, குருந்தையடி போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு தற்காலிகக் கொட்டில்கள் அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவ்வாறு அமைக்கப்பட்டு வருகின்ற கொட்டில்களில் 3500 தற்காலிகக் கொட்டகைகள் தேவைப்படுவதாக கல்முனைத் தமிழ்ப் பிரிவு பிரசேத செயலாளர் வன்னியசிங்கம் வாசுதேவன் தெரிவித்தார்.

## குளத்து நீரை குடி நீராக்கும் கனடா படையினர்

(பாண்டிருப்பு நிருபர்)

கனடா நாட்டு இராணுவத்தினர் பாண்டிருப்பு பகுதியில் குளத்து நீரை சுத்திகரித்து அதனை குடிநீராக்கி பொது மக்களுக்கு வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதற்குரிய அனைத்துக் கருவிகளையும் இங்கு கொண்டு வந்து அதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுகின்ற துறை நீலாவணை மற்றும் ஏனைய கிராம மக்களுக்கும், அகதிகள் தஞ்சமடைந்துள்ள இடங்களுக்கும் இவர்கள் இக்குடிநீரினை வழங்கி வருகின்றனர். இச் சுத்திகரிப்பு நடவடிக்கையினைப் பார்வையிடுவதற்காக மக்கள் சென்ற வண்ணம் உள்ளனர். என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

# தென்னிலங்கை துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் ஐவர் பலி !

## உகண்டா நாட்டு குடி மகனும் ஒருவர்

(நமது நிருபர்)

கொழும்பு மட்டக்குழியிலும் களுத்துறை அளுத்கமவிலும் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இரு வேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் போது உகண்டா நாட்டு குடிமகன் உட்பட ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் இரவு கொழும்பு மட்டக்குழியிலுள்ள பாதாள உலகக் குழுவினரின் வசிப்பிடமொன்றை பொலிசார் முற்றுகையிட்ட சமயம் இரு தரப்பினருக்குமிடையில் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பாதாள உலக குழுவைச் சேர்ந்த மூவர் பொலிசாரினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

களுத்துறை அளுத்கமவில் இடம்பெற்ற மற்றுமொரு சம்பவத்தில் உகண்டா நாட்டு குடிமகன் உட்பட இருவர் தனிப்பட்ட விரோதம் காரணமாக இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட உகண்டா நாட்டு குடிமகன் காலஞ்சென்ற உகண்டா நாட்டு ஜனாதிபதி இடியாமீனின் ஆட்சிக் காலத்தில் பாதுகாப்பின் நிமித்தம் அந்நாட்டிலிருந்து வெளியேறி இலங்கையில் வசித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.க. கருஜயசூரியா குழு மட்டு மாவட்டத்திற்கு வருகை

(காத்தான்குடி நிருபர்)

எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.க தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுதலின் பிரகாரம் ஐ.தே.க தூதுக்குழு பிரதித்தலைவர் கருஜயசூரிய தலைமையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இன்று வருகை தரும் குழுவில் முன்னாள் அமைச்சர்கள் ஐவரும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அடங்குவர்.

இவர்கள் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களான ஓந்தாச்சிமடம், பெரியகல்லாறு, கோட்டைக் கல்லாறு, களுவாஞ்சிக்குடி, ஆரையம்பதி, பாலமுனை, காத்தான்குடி, மட்டக்களப்பு, கல்லடி, நாவலடி ஆகிய பிரதேசங்களுக்கும் செல்லவிருக்கின்றனர்.

விடுதலைப்புலிகளையும் சந்திக்கும் இவர்கள் தற்போதைய நிலமை குறித்தும் புலிகளுடன் கலந்துரையாடி அவர்கள் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்வர். மட்டக்களப்பு கச்சேரிக்கும் செல்லும் இவர்கள் அங்கு மட்டு மாவட்ட எம்.பிக்கள் அரச அதிபர் ஆகியோரையும் சந்திக்கவுள்ளதாக முன்னாள் அமைச்சர் பி.தயாரத்தன தெரிவித்தார்.

**கல்லடி கடல்............**

சிதறி ஓடினர் எங்கும் அழுகுரல் சத்தத்துடன் பாதுகாப்பான இடங்களுக்கச் சென்றனர்.

விடயத்தை அறிந்த பொறியியலாளர் தலையிட்டு அவ்வாறு சுனாமி ஏற்பட்டால் முன்கூட்டியே அறிவிப்போம் எனவும் மக்கள், அச்சம் அடையத்தேவையில்லையெனவும் அறிவித்துள்ளார். அறிவிப்பு விடுக்கப்பட்டாலும் மின்குமிழ்கள் எரிய விடப்பட்டு மக்கள் தெய்வத்திடம் பிராத்தித்தவாறு விடிய விடிய விழித்திருந்ததாக இப்பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

**கனடாவின் நிதி...........**

சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேசினார். அதன்பின் கருத்து தெரிவித்த அவர், கனேடிய அரசும் மக்களும் இந்த உதவிகள் சமமாகப் பகிர்ந்தளிப்பதில் அவதானமாக உள்ளனர் எனவும், தான் ஊடக விளம்பரங்களுக்காக அல்லாமல் நீண்ட கால உதவித் திட்டங்களுடனேயே இங்கு வந்தேன் எனவும் கூறினார். எதிர்வரும் திங்கட்கிழமை கனேடிய பிரதமர் இலங்கைக்கு வரும் போது இங்கு தான் பிரயாணம் செய்து அறிந்தவற்றையும் அரசியற்துறைப் பொறுப்பாளருடன் கலந்துரையாடியவற்றையும் அவரிடம் எடுத்துக் கூறப் போவதாக தெரிவித்தார்.

அம்பாறையில் கனேடிய இராணுவம் உதவிப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை உதவியளிப்பதாக உள்ளதென சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

**ஈழவேந்தன்.....**

வில்,தம்பிலுவில், அக்கரைப்பற்று பகுதிகளுக்கு சென்று அனர்த்த நிலவரங்கள் குறித்துப் பார்வையிட்டார்.

அத்துடன் பாதிப்புற்ற மக்களை சந்தித்து சம்பவங்கள் தொடர்பாகவும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

ஈழவேந்தனுடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ. சந்திர நேருவும் சென்றிருந்தார்.

# அபுல் தாஜமரின் திடீர் மரணம் நற்பிட்டிமுனைக்கு பேரிழப்பு

(யூ.எம்.இஸ்ஹாக்)

கனியு மணல் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் ஏ.எம்.அபுல் தாஜுரின் திடீர் மரணம் நற்பிட்டிமுனை மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாரிய இழப்பாகும். இவரின் இழப்பால் நற்பிட்டிமுனை மக்களுக்கு அரசியல் ரீதியாக முதன்முதலாகக் கிடைத்த பணிப்பாளர் பதவியையும் இழந்து நிற்கின்றோம்.

இவ்வாறு கல்முனைப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் கரவாகு மேற்கு முன்னாள் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருமான ஏ.அப்துல் கபூர் பணிப்பாளர் அபுல் காஜுரின் மறைவையிட்டு வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்தார்.

அந்த அனுதாபச் செய்தியில் அப்துல் கபூர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-மறைந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ர.்.ப் அவர்களின் வேண்டுதலின் பேரில் 1987 இல் அனுராதபுர மாவட்டத்தில் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டார். இதன் மூலம் அரசியலில் முதன்முதலாக காலடி எடுத்து வைத்த அபுல் தாஜீர் 2004 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்ட திருமதி.பேரியல் அஷ்ர.்.ப் , ஏ.எல்.எம்.அதாஉல்லா, எச்.எம்.எம்.ஹரீஸ் ஆகியோர்களின் வெற்றிக்காக அயராது பாடுபட்டார்.

**மட்டு அம்பாறை....**

தேசத்தில் மலேரியா பிரிவினரால் மலத்தியன் நாசினிகள் தெளிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் நுளம்பு பெருக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களினாலும், பொது அமைப்புக்களினாலும் நுளம்பு வகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**தாயகத்தில்..........**

மாவட்டம் ஒரு விவசாய பிரதேசமாக இருந்த போதிலும் உழவர்கள் ஆதவனுக்கு பொங்கல் படைத்து வழிபடுவது பாரம்பரிய நிகழ்வாகவே அமைந்துவந்தது. ஆழிப்பேரலையில் பல்லாயிரக்கணக்கானவர்கள் தங்களுடைய உறவுகளையும் வீடு வாசல்களையும் இழந்து அநாதைகளாக முகாம்களில் வாழும் நிலையில் தைப்பொங்கல் வழமை போல் இல்லை.

ஆலயங்களில் பொங்கல் வைபவம் கோலாகலமின்றி அமைதியான முறையில் நடைபெற்றது. எவருமே புத்தாடைகளை அணியவில்லை. ஆலயங்களில் நடைபெற்ற ஆத்ம அகவணக்க பூசையில் மக்கள் கலந்து கொண்டனர். இறம்பைக்குளம் தேவாலயத்திலும் ஆத்ம அகவணக்க பிராத்தனை இடம்பெற்றது.

# தமிழர் புனர்வாழ்வுப் பணியை மக்கள் பாராட்டுகின்றனர் என சிவாஜிலிங்கம் பூரிப்பு

(வி.ரி சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பாதிப்புக்குள்ளான பிரதேச நலன்புரி முகாம்களில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆற்றி வரும் சேவைகள் குறித்து தமிழ், முஸ்லிம் மக்கள் வெகுவாகப் பாராட்டுகின்றனர்.

இவ்வாறு அம்பாறை மாவட்டத்தில் ஐந்து நாட்கள் தங்கியிருந்து சகல பகுதிகளுக்கும் விஜயம் செய்தயாழ். மாவட்ட தமிழர் கூட்டமைப்பு எம்.பி கே.சிவாஜிலிங்கம் கூறினார்.

பெரியநீலாவணை, கல்முனை, கல்முனைக்குடி, காரைதீவு, நிந்தவூர், அட்டப்பள்ளம், ஆலையடி வேம்பு, தம்பட்டை, தம்பிலுவில், திருக்கோவில், விநாயகபுரம், கோமாரி, சாகாமம், ஊறனி, இன்ஸ்பெக்டர் ஏற்றம், உல்லை, பொத்துவில் போன்ற பகுதிகளுக்கு அவர் விஜயம் செய்தார்.

வெலோவின் நிருவாகச் செயலாளர் ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் பலர் அவரோடு இரவு பகலாகச் சென்று மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இனமத பேதமின்றி நிவாரணம் வழங்கவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார் உரிய காலத்தில் வ[illegible] ஆறுதல் கூறிய எம்.பி சிவாஜிலிங்கத்திற்கு மக்கள் பாராட்டுத்தெரிவித்தனர்.

**கோமாரி...........**

யதாகவும் அதிரித்தார்.

காஞ்சிரங்குடா அகதி முகாமில் நிவாரணம் கிடைக்கவில்லையென்றும் அவர் மேலும் கூறியுள்ளதாக அரச அதிபரிடம் இவைபற்றி முறையிடப்பட்டுள்ளது.

**கலாசார.............**

கலந்துரையாடிய பின் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிக மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்திய நாவலடி, கல்லடி பகுதிக்கு சென்று பார்வையிட்டார்.

அத்துடன் திருச்செந்தூர் முருகன் ஆலயம் கல்லடி முகத்துவாரம் இந்து ஆலயம் ஒன்றுக்கும் தலா இருபத்தையாயிரம் ரூபாவுக்கான காசோலைகளையும் வழங்கினார்.

**சுனாமி...........**

கடல் பேரலையினால் உயிரிழந்த லோகநாதன் நிசாந்தன், மற்றும் ஆசியாக்கண்டத்தில் உயிரிழந்த அனைத்து உயிர்களுக்கும் ஆத்ம சாந்தி வேண்டிய பிரார்த்தனை நடைபெற்றதுடன், ஆன்மீகச் சொற்பொழிவுகள், பஜனைப் பாடல்கள் என்பன நடைபெற்றது. இந்நிகழ்வில் அரசடித்தீவு சக்தி இல்லம் மற்றும், கொக்கட்டிச்சோலை கதிரொளி இல்லப் பொறுப்பாளர் புஸ்பலிங்கம் மற்றும் இரண்டு இல்லங்களையும் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களும் கலந்து கொண்டனர்.

வருடா வருடம் தைப்பொங்கலை வெகு சிறப்பாகக் கொண்டாடி வரும் கதிரொளி மற்றும் சக்தி இல்லங்கள் இம்முறை அதனைத் தவிர்த்து இந்த ஆத்மசாந்தி வேண்டிய பிரார்த்தனையை நடாத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தாய் தந்தை இழந்தோரை பராமரிக்கும் ஹறி இல்லம்

(காத்தான்குடி நிருபர்)

இயற்கை அனர்த்தம் காரணமாக தாய் தந்தையை இழந்து அநாதரவாக்கப்பட்டவர்களை பராமரிக்க மட்டக்களப்பு ஹறி சிறுவர் இல்லம் ஆயத்தமாகவுள்ளது. அவ்வாறு உள்ளவர்களை அவர்களது உறவினர்களோ,. பொது அமைப்புக்களோ தொட ர்பு கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ஹறி சிறுவர் இல்லம் 155/1 புதிய கல்முனை வீதி, கல்லடி மட்டக்களப்பு. தொலைபேசி இலக்கம் 065-2225576, 0776402810 ஆகும். இந்த அநாதைப் பிள்ளைகளுக்கு உதவ விரும்புகின்ற பொறுப்பதிகாரிகளும் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சட்ட உதவிச் சேவை

அண்மையில் எமது பிரதேசங்களில் ஏற்பட்ட இயற்கையின் சீற்றத்தால் (சுனாமி ஆழிப்பேரலை) நிர்க்கதியான எமது மக்களின் துயர் துடைப்பதன் ஓர் அங்கமாக மனித உரிமைகள் இல்லம் "சட்ட உதவிச் சேவை" என்ற பிரிவினை ஏற்படுத்தியுள்ளது.

இதன் முக்கிய நோக்கம் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு மீள் புனரமைப்பின் போது தேவைப்படும் பிறப்பு, இறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்கள், தேசிய அடையாள அட்டை மற்றும் தேவையான பிற ஆவணங்களை பெற்றுக் கொள்ள உதவுவதோடு, சட்ட, நிருவாக ஆலோசனை வழி காட்டல்களையும் மேற்படி பிரிவு மேற்கொள்ளும். உதவிகள் தேவைப்படுவோர் கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்வு கொள்ளவும்.

இணைப்பாளர்,
மனித உரிமைகள் இல்லம்,
இல~06, பான்சாலை வீதி,
மட்டக்களப்பு,
தொ.பே.இல. 065~2225573

உடனடி வெளிநாட்டு வேலைவாய்ப்பு

T.Vipusanan Manpower (pvt) Ltd.
Badula Rd, Karadiyanaru Chenkaladi
Tel:071-2528248 H.phone: 0777-6668747

பாலசிங்கம் தாமரைவதனன்

மேற்படி எமது நிறுவனத்தின் ஊடாக U.A.E., Saudiarabia, Dubai (பிரிட்டிஷ் வேஷற் அன்ட்கோ), Oman, Doha-Qatar ரெலிகாம் போன்ற இடங்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக விண்ணப்பித்தவர்களுக்கு ''வீசா'' (Visa) கிடைக்கப்பெற்றுள்ளதால் எம்மூடாக விண்ணப்பித்த அனைவரும் எதிர்வரும் 17-01-2005 அன்று திங்கட்கிழமைக்கு முன் எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

18-01-2005 அன்று செவ்வாய்கிழமை கொழும்பு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் ஒப்பந்தம் (Agreement) கையொப்பமிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Agreement கையொப்பம் இடச்செல்ல வேண்டியவர்களுக்காக ''ராஜா ரவல்ஸ்'' பஸ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. 17-01-2005 செவ்வாய்க்கிழமை பி.ப 8.00 மணிக்கு செங்கலடியிலிருந்து புறப்பட இருக்கின்றது.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தால் 15.01.2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது